பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 28 சனிக்கிழமை (13.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 290

## சர்வதேச தொண்டு நிறுவனங்களை வெளியேறவிடாது தடுத்து

# வன்னியில் மக்கள் திரண்டு

# முற்றுகைப் போராட்டம்!

## "கட்டாயத்தின் பேரில் விருப்பமின்றியே இந்த முடிவு"- அதிகாரிகள்

கிளிநொச்சி, செப்ரெம்பர்13

**வன்னியில் நிலை கொண்டுள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இங்கிருந்து வெளியேறுவதைத் தடுக்கும் முற்றுகைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று ஈடுபட்டனர்.**

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் அமைந்துள்ள கரடிப்போக்குச் சந்தியிலும், உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் பிரதான களஞ்சியம் அமைந்துள்ள 55 ஆவது கட்டையிலும் நேற்றுக் காலையில் இருந்தே மக்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு முற்றுகைப் போராட்டத்தில் குதித்தனர்.**

அரசாங்கத்தின் கட்டாயப் பணிப்பின் பேரில் வன்னியிலிருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகளும் பணியாளர்களும் வெளியேற விடாது மக்கள் அவர்களை முற்றுகையிட்டுத் தடுத்தனர்.

நேற்றுக்காலை 6 மணிக்கே இரண்டு இடங்களிலும் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உப நிறுவனங்களான மேற்படி தொண்டு அமைப்புகளைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை வெளியேற விடாது முற்றுகையிட்டனர். அங்கிருந்த வாகனங்களுக்கு முன்னால் அமர்ந்து கொண்டனர்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகம் முன்பாக ஒன்று

(12ஆம் பக்கம் பார்க்க)




## தொண்டு நிறுவனங்கள் வெளியேறுவது எமக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது

### கிளிநொச்சி அரச அதிபர் சொல்கிறார்

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சியில் இருந்து தொண்டு நிறுவனப் பணியாளர்கள் வெளியேறுவது தமக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது என்று கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தொண்டு நிறுவனப் பணியாளர்கள் வெளியேற்றத்தால், அவர்கள் மேற் கொண்டு வந்த அபிவிருத்தி திட்டங்கள் தடைப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வன்னிப் பிரதேசத்தில் உக்கிரமடைந்துள்ள மோதல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலைப் பகுதியில் விமானத் தாக்குதல்கள்

கொழும்பு, செப். 13

குடாநாட்டில், முகமாலைப் பகுதியில் விமானப் படையினரின் கிபீர் விமானங்கள் நேற்று மாலை இரு தடவைகள் குண்டு மழை பொழிந்திருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை இந்தியா உறுதிசெய்ய வேண்டும்

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

கொழும்பு, செப். 13

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் நிலவும் மோசமான சூழ்நிலை குறித்து கவலை வெளியிட்டுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பிரகடனப்படுத்தப்படாத முழுமையான யுத்தத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை உறுதி செய்ய இந்தியா தலையிட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மோட்டார் ஷெல்கள் விமானப்படையினரால் மீட்பு!

கொழும்பு, செப். 13

திருகோணமலை, மூதூர் கிழக்கே உள்ள கந்தல் காட்டுப்பகுதியில் நேற்று மாலை ஒருதொகை மோட்டார் ஷெல்களை விமானப்படையினர் மீட்டிருக்கின்றனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

82 மில்லி மீற்றர் அளவுடைய 185 மோட்டார் ஷெல்க்ளையே விமானப்படையினர் மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)



வவுனியா படைத்தளத்தில் களப்பலியான கரும்புலிகளுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## பிரதம நீதியரசரின் தீர்ப்புகளை விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு அமையுங்கள்!

### நான்கு பௌத்த அமைப்புகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு செப்.13

பௌத்த மதத்தை உயர்நீதிமன்றத்தில் அவமதித்தமை மற்றும் சர்ச்சைக்குரிய சுமார் நூறு வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகள் ஆகியவை தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவின் செயற்பாடுகள் குறித்து விசாரித்து, ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்குமாறு நான்கு பௌத்த மத அமைப்புகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எழுத்து மூலம் கோரியிருக்கின்றன.

மதமாற்றக்கண்காணிப்புமையம், பௌத்த தேசிய இயக்கம், சோமதேரர் சிந்தனை மன்றம், பௌத்த சக்திசேனை ஆகிய

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வதாரி வருஷம் ஆவணி மாதம் 29ஆம் நாள் நாளை (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை பகல் 8.55 மணிமுதல் 9.55 மணிவரையுள்ள துலா லக்கினமும், சதய நக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

அளவெட்டி கும்பிழாவளை
பிரம்மஸ்ரீ இராமலிங்க சர்மா தம்பதிகளின் பௌத்திரனும்
சிவஸ்ரீ சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் - சாந்திமலர்
தம்பதிகளின் புத்திரனுமாகிய
**சிரஞ்ஜீவி பிரதீப சர்மாவுக்கு**

விழிசிட்டி - தெல்லிப்பளை
பிரம்மஸ்ரீ சடமர்ஷண, சி.சிவபாதவிருதய ஐயர்
தம்பதிகளின் பௌத்திரியும்
சிவஸ்ரீ சிவநாவுக்கரசுக் குருக்கள் (மூர்த்திக் குருக்கள்) -
மேனகா தம்பதிகளின் புத்திரியுமாகிய
**சௌபாக்கியவதி நவநீதாவை**

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்யதாரணம் செய்ய எல்லாம் வல்ல கும்பிழாவளை விநாயகப் பெருமானின் திருவருளுடனும், பெரியோர்கள் ஆசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் தெல்லிப்பளைதுர்க்காதேவி கல்யாண மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித் தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாமவர்த்தனம்: 14.09.2008 காலை 5.00 மணிக்கு.
வதுவரகிருகப்பிரவேசம்: 14.09.2008 பிற்பகல் 2.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
வரவேற்புபசாரம்: 17.09.2008 பிற்பகல் 3.00 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி சோ.சாந்திமலர்,
குமாரதாஸ சர்மா வதசலா தம்பதிகள்,
கும்பிழாவளைப்பிள்ளையார் கோயில்,
அளவெட்டி.

சிவஸ்ரீ. ச.சிவநாவுக்கரசுக் குருக்கள்,
மேனகாதேவி தம்பதிகள்,
கட்டுடை மேற்கு, கட்டுடை,
மானிப்பாய்.

இருவீட்டார் அழைப்பு

## நான்காம் ஆண்டு நினைவில்



தோற்றம் 25 ★ 10 ★ 1960

மறைவு 28 ★ 08 ★ 2004

**அமரர் விஜயநாதன் விக்கினேஸ்வரராசா**
(தெல்லிப்பளை, வீமன்காமம்)
(திதி:- 13.09.2008)

நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும்
என்றென்றும் உங்கள் நினைவோடு
இருக்கின்றோம்.

நிரந்தர முகவரி: வீமன்காமம், தெல்லிப்பளை.
தற்போதைய முகவரி:
களவாவோடை,
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

மனைவி,
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் ,பலாலி வீதியில் அமைந்திருக்கும் காமாட்சி அம்பாள் ஆலய (காளியம்பாள்) பரிபாலன சபையின் பொருளாளர் சே.செல்வக்குமாரனின் அன்புத் தந்தை

**ப.சி.செல்வநாயகம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருளுமாறு காமாட்சி அம்பாள் பாதம் பணிகின்றோம்.

காமாட்சி அம்பாள் ஆலயம்,
உரும்பிராய்.

பரிபாலன சபையினர்.

## உடன் தேவை

மல்லாகத்தில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றிற்கு பெண் பணியாளர் உடன் தேவை.

தொடர்பு:- S.மணிவண்ணன்
222 2006
0771727904

## வான் விற்பனைக்கு

252 XXXXதொடரிலக்கமுடைய ரவுனேஸ் (TOWNACE) வான் விற்பனைக்கு உண்டு. 14.09.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் பிப 2.00 மணி வரை பார்வையிடலாம்.

தொடர்பு:-
இல, 160(பழைய இலக்கம் 54)
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் மாணவனும்
தற்பொழுது பகுதி நேர
விரிவுரையாளருமாகிய

**திரு.S.கமலக்கண்ணன்**

காமராஜர் பல்கலைக்கழக
M.A.(பொதுநிர்வாகம்) பட்டம் பெற்றுள்ளார்.
இவரை பெருமகிழ்ச்சியோடு எமது கல்லூரி
சமூகம் வாழ்த்துகின்றது.

எமது கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றி M.A. பட்டம் பெற்றுக் கொண்ட ஏனையவர் களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ். (78343)

## வேலையாள் தேவை

கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர், சிட்டை எழுதுனர், கணனி அனுபவம் வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை. கீழ் உள்ள முகவரிக்கு திங்கட்கிழமை (15.09.2008) நேரில் சமூகம் தரவும்.

யாழ் போன் சொப்,
இல, 10, நவீன சந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனை உத்தியோகத்தர்
திரு.சு.பரமேஸ்வரனின் அன்புத் தாயார்

**திருமதி**
**கண்மணி சுப்பிரமணியம்** அவர்களின்

மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்/
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் சைவ உணவகத்திற்கு ரீமேக்கர், சப்பிளையர், சுவீற்மேக்கர் போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ள பணியாளர்கள் உடன் தேவை. வேலை நேரம் காலை 6.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூபா 300/= உணவும் வழங்கப்படும்.

தொடர்பு:- சரஸ்வதி விலாஸ்
சைவ உணவகம்,
இல, 70, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக சமுர்த்தி அலுவலரும், நலன்புரிச் சங்க உறுப்பினருமாகிய திருமதி மா.முத்துலட்சுமி அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் செல்லத்துரை விநாயகமூர்த்தி அவர்கள்**

11.09.2008 வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி
பிரதேச செயலரும், நலன்புரிச் சங்க
உறுப்பினர்களும்
பிரதேச செயலகம், வலிகாமம் மேற்கு, சங்கானை.

## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம்
நாகசுர வித்துவான்

**வி.கே.கானமூர்த்தி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

கணேசன் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 07 ★ 03 ★ 1928

மறைவு 26 ★ 08 ★ 2007

**பொன்னையா பொன்னு**
(திதி:- திரயோதசி - 13.09.2008)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**ஆர்தர் ஜெரமியா வல்லிபுரம் கனகரத்தினம்**



அல்வாயைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆர்தர் ஜெரமியா வல்லிபுரம் கனகரத்தினம் நேற்று (12.09.2008) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருமதி வல்லிபுரம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருபை இரத்தினத்தின் அன்புக் கணவரும், ஆஸ்திரேலியாவில் வசிப்பவர்களான ராஜினி, விமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவபாலன், தேவசேயன் (ஆசீர்வாதம்) ஆகியோரின் அன்பு மாமனும், சுமித்திரா, நிருபா, ஷோபனா, சத்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும், யோசுவா, றெபேக்கா், ஹானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.09.2008) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிலாவரை வீதி,
புத்தூர்ச்சந்தி.

தகவல்:
ராஜினி (மகள்).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கில் மீளக்குடியமர விரும்புவோரின் பதிவு நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறுகின்றன

யாழ்ப்பாணம்,செப்.13

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் மீளக்குடியமர விரும்புபவர்களின் காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான பதிவுகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

கிராமசேவகர் பிரிவு ரீதியாகப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குரும்பசிட்டி (ஜே/242), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243) ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கான பதிவுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

பதிவுகளை மேற்கொள்ளவுள்ளோருக்கான ஆலோசனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது எனக் கிராம அலுவலர் செ.சிவலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பிரதேசத்தில் சொந்தக் காணி வைத்திருப்பவர்கள் காணி உறுதியின் நிழற்படப் பிரதியுடனும் ஏனையோர் காணி உடைமையை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடனும் வருகை தருமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, அன்றைய தினம் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான அடையாள அட்டை வழங்கல், ஓய்வூதியர் திட்டம் போன்ற விடயங்கள் சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி பாடசாலைகளுக்கிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.13

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கல்வி அமைச்சின் அழகியல் கல்விப் பிரிவும் ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து இப்போட்டிகளை நடத்தவுள்ளன.

சித்திரம், பாடல், பேச்சு, சிறுகதை, கட்டுரை, குறுநாடகம் என்னும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

'உலகை வெற்றி கொள்ளும் சிறுவர்' என்னும் தலைப்பில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற மாணவர்களைத் தயார்ப்படுத்துமாறு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ.தர்மதாச, கல்வி அமைப்பாளர் துஷார குணதிலக்க ஆகியோர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களையும் விவரங்களையும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (202)

## 300 வருடங்கள் பழமை வாய்ந்த மரம் வீழ்ந்தது!



யாழ்.பல்கலைக்கழகத்தின் வாசலில் நின்றிருந்த 300 வருடங்கள் பழமை வாய்ந்த அரச மரமொன்று நேற்றுமுன்தினம் முறிந்து வீழ்ந்தது. முறிந்து வீழ்ந்த மரத்தைப் படத்தில் காணலாம். *(படம்: கலாநிதி நா.சிவயோகன்)*

## சாட்டி மாதா ஆலய உற்சவத்தில் கடை அமைக்க அனுமதி பெறவேண்டும்

### வேலணைப் பிரதேச செயலர் அறிவுறுத்து

மானிப்பாய்,செப்.13

சாட்டி - சிந்தாத்திரை மாதா ஆலய உயர் திருவிழாக் காலத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் முன் அனுமதியைப் பெறவேண்டும் என வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அறிவுறுத்தியுள்ளார்.

சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இக்காலப்பகுதியில் தீவகப் பகுதி தவிர்ந்த ஏனைய பிரதேச வியாபாரிகள் கடைகள் அமைப்பதாயின் முதலில் பிரதேச செயலரின் அனுமதியைப் பெற வேண்டும். பின்னர் பிரதேச சபையின் வியாபார அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே வியாபாரம் செய்ய அனுமதிக்க தீவக கடற்படை கட்டளை அதிகாரி அனுமதி வழங்கியுள்ளார் எனவும் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

இதேவேளை - வியாபாரத்திற்கு வருகை தரும் தீவகப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய வியாபாரிகளின் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பனவும் முன்கூட்டியே பிரதேச செயலகத்திடம் வழங்கப்படவேண்டும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (202-95)

## முதுகலைமாணி பரீட்சைகள்

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் தமிழில் முதுகலைமாணிக் கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை, பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிக் கற்கை நெறிக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை என்பன நடத்தப்படவுள்ளன.

முதலாம் அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமையும் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை 29ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேரசூசியினை பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.13

மயிலணி சைவ மகா வித்தியாலயக் கல்விக் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் பிரதம விருந்தினராகவும், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன், வலிகாமம் கல்வி வலய வர்த்தக ஆசிரிய ஆலோசகர் ந.துரைராசசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், மயிலணி ஜன சக்தி சி.க.உ.கூ.சங்கத் தலைவர் சி.தர்மலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (50)

* * *

யாழ்ப்பாணம்,செப்.13

சர்வோதய சமூக சேவகி செல்வி பொன். ஜமுனாதேவி அவர்களின் பொன்விழா நிகழ்வும் மலர் வெளியீடும் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கௌரவ விருந்தினராகவும், பேராசிரியர் வி.சிவகாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (50)

* * *

யாழ்ப்பாணம்,செப்.13

'கோல்டன் பிளேஸ்' (Golden Plays) நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆங்கிலப் பாடநெறி ஆசிரிய, மாணவர்களினால் எழுதித் தொகுக்கப்பட்ட 20 நாடகங்களைக் கொண்ட இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பிரதம விருந்தனராகவும் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (50)

* * *

யாழ்ப்பாணம்,செப்.13

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் இவ்வாண்டுக்கான (2008, 2009) வலயத் தலைவரின் வருகைதரும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் டாக்டர் சி.சுந்தரராயனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்கள், அதிபருக்கும் கௌரவிப்பு, பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

பல செயற்றிட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (50)

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.13

அகில இலங்கை சைவப்புலவர் பரீட்சை இம்மாதம் எதிர்வரும் 20, 21, 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, லண்டன் ஆகிய இடங்களில் குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களில் தோற்றுகின்றவர்களுக்குரிய அனுமதி அட்டைகள், நேரசூசி என்பன அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை அவை கிடைக்கப்பெறாதவர்கள் சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் அறிவித்துள்ளது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ச.ச. நிலையத்திற்கு நிதி

யாழ்ப்பாணம்,செப்.13

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் சனசமூக நிலையத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் 75 ஆயிரம் ரூபாவும் சனசமூக நிலையத்திற்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 30 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## யாழ்.மாவட்டத்தில் 1,879 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 879 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்றன.

யாழ்.மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் மூலம் இவ்விவரம் தெரியவந்துள்ளது.

இடம்பெயர்ந்த இக்குடும்பங்கள் 70 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன.

இந்த நலன்புரி நிலையங்களில் உள்ள வசதியீனங்களைக் கருத்திற்கொண்டு அவற்றை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலர்களுக்கு யாழ்.அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (202-300)

## அளவெட்டியில் தீ மிதிப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

அளவெட்டி வடக்கு ஐயனார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேகம், தீ மிதிப்பு என்பன இடம்பெறவுள்ளன. காலை 8 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று 10 மணிக்கு தீ மிதிப்பு நடைபெறும். (1)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார்.

## சிறுவர் உரிமைகளை மீறுபவர்கள் சமுதாய வளர்ச்சியின் தடைக்கற்கள்

தெல்லிப்பழை,செப்.13

சிறுவர்களின் கல்வியை இடைநிறுத்தி வேலைக்குச் செல்வதற்கு ஒழுங்குசெய்பவர்களும் வேலை வழங்குபவர்களும் தண்டிக்கப்படவேண்டியவர்கள். இவ்வாறு சிறுவர்களின் உரிமைகளை மீறுபவர்கள் சமுதாய வளர்ச்சியின் தடைக்கற்கள்.

வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி. மஞ்சுளாதேவி சதீசன் இவ்வாறு தெரிவித்தார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கப்பம்புலம் பாரதி முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழாவும், விளையாட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றன. அவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எந்த ஒரு நாட்டின[illegible] பிரதேசத்தினதோ வளர்ச்சி என்பது அங்குள்ள சிறுவர்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. அவர்கள் சரியான முறையில் கல்வி, விளையாட்டு மற்றும் சமூகத்தோடு ஒன்றி வாழ்தல் போன்ற செயற்பாடுகளில் சரியான வழியில் நெறிப்படுத்தப்படும்போது, அதன் பிரதிபலிப்பாக எமது சமூகம் பல்வேறுபட்ட நற்பலன்களை நிச்சயமாகப் பெற்றுக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இளைய சமுதாயத்தை வளம்பட வளர்த்தெடுக்கவேண்டிய அவசிய தேவை இருக்கின்ற எமது பிரதேசங்களில், இன்று பல சிறுவர்கள் தொழிலாளர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதனை நாங்கள் அன்றாடம் அறிந்துகொண்டிருக்கிறோம்.

14 வயதிற்குட்பட்ட அனைவருமே சிறுவர்கள் என்ற பதத்தில் அடங்குபவர்கள். இவர்கள் அனைவருமே கட்டாயமாகக் கல்வி கற்க[illegible]வர்கள். எந்தவொரு [illegible] இத்தகைய சிறுவர்களின் கல்வியை இடைநிறுத்தி வேலைக்குச் செல்வதற்கு ஒழுங்கு செய்பவர்களும், வேலை வழங்குபவர்களும் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டியவர்களே.

உலக நாடுகளில் தோன்றிய பல பெருந்தலைவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் போல எமது பிரதேசங்களிலும் எத்தனையோ கல்விமான்கள் நாளை உருவாகலாம். சிறுவர்களின் உரிமைகளில் தடை போடப்படுவதனால் நாளை உருவாகப்போகும் அறிவாளிகள் பலரை எமது நாடு இழந்துவிடும் அவலநிலை ஏற்படும்.

எனவே, சிறுவர்களின் கல்வி மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் சமூகவிரோதிகளாக இருந்து எமது சமுதாய வளர்ச்சியின் தடைக் கற்களாக மாறிவிடாமல் எமது எதிர்காலச் சந்ததியை வளமானதாக மாற்றுவதற்கு அனைவருமே ஒன்றிணைந்து பணியாற்றவேண்டும் - என்றார். (202-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவன்மையும் நாவன்மையும் கைவரப்பெற்று தமிழுக்கு அருந்தொண்டாற்றிய முத்தமிழ்ப் புலவர்



மெய்யுணர்ந்த அறிஞர்க்கு இன்ப துன்பம் என்பவை வாழ்க்கைக் கடலின் இரு வகை அலைகள். அவர்கள் அவற்றி டையே குளித்து எழுவர். மற்றவர்களுக்கு இன்பமும் துன்பமும் வாழ்வின் இரு நிலை கள் ஒன்றைக் கண்டேங்கியும் மற்றொன்றைக் கண்டஞ்சியும் மயங்குவர். கற்பனை சிறந்த புலவர்க்கு இவையிரண்டும் இரண்டு வகை விளையாட்டுப் பொருள்கள்!

மேற்கண்ட சான்றோன் மொழிக்கொப்ப பாவலர்கள் தனியுலகத்தில் வசிப்பவர்கள். இவர்கள் இயற்கையோடு ஒன்றிப் புதுப்புது எண்ணங்களை பெற்றுப் புதுப்பொலி வுடன் இயங்குவார்கள்.

அதே பாங்கில் முதுதமிழ்ப்புலவர் மு.நல்ல தம்பி அவர்களும் இயற்கையோடு ஈடுபாடு கொண்டவர். இயற்கை வாழ்வோடு இணைந்து இன்பம் கண்டவர்.

கடற்கரையின் கவினுறு காட்சிகளில் மனம் பறிகொடுத்த அனுபவத்தை அழ காகக் குறிப்பிடுகின்றார் அவர். சுருளலைகள் அவரை வருக வருக என அழைத்தனவாம்.

தமிழ் முருகன் அவர் உள்ளத்தில் நர்த் தனஞ் செய்துகொண்டு நின்றானாம். செங்கதிரோன் தன் கதிர் பரப்பிக் கடல் மேலே தோன்றிய காட்சி வெற்றி வேலோன் பவனி வருதல் போன்றிருந்ததாம்.

இப்படியாகப் பல்வேறு இயற்கைக் காட்சிகளுடன் இணைந்து இன்ப துன்பங்களைக் கண்டு ஏக்கமோ அச்சமோ அடையாமல் அவற்றைத் தம் கவித்துவ ஆற்றலுக்குள் சிக்கவைத்துச் சந்தம் நிறைந்த இனிய கவிதைகளைப் படைத்துள்ளார்.

புலவர் அவர்கள் வட்டுக்கோட்டை யில் உள்ள சிந்துபுரப் பகுதியில் தோன்றிக் குறுகிய காலம் வாழ்ந்தவராயினும் அந்தக் குறுகிய கால எல்லைக்குள் பலரும் மெச் சும்படி வாழ்ந்தவராயினும், அறிஞன் ஒரு நாட்டின் சொத்து என்பது போல, நாட்டு மக்கள் அனைவரும் பயனடையக் காரணமாக விளங்கினார்.

**முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பியின் நினைவு தினம் இன்று 13.09.2008 ஆகும்**

இளமையில் கவிபாடும் வன்மை, நாடகம் நடிக்கும் ஆற்றல் என்பன இவரிடம் காணப்பட்ட திறமைகளாகும். இவர் பயிற் றப்பட்ட ஆசிரியராகத் தமது கடமையை ஆரம்பித்தார். இவரது ஆசிரிய சேவையில் சாஹிராக் கல்லூரியில் இருந்த காலம் செய்த சேவை உன்னதமானது.

ஜெனாட் எஸ். கமால்தீன் போன்ற பல சிறந்த தமிழறிஞர்களுக்குத் தமிழ் புகட்டிப் புலமையடையச் செய்தவர்.

இக்கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவும் ஆரிய திராவிட பாஷபிவிருத்திச் சங்கப் பரீட்சகராகவும் இலங்கை வித்தியா பகுதிப் பாடநூற் பிரசுரசபை அங்கத்தவராகவும் கடமைபுரிந்தவர்.

**சுவாமி விபுலானந்தரின் நட்புக்குரிய நல்லறிஞன்**

விபுலானந்தர் பால் இவர் கொண்டிருந்த பேரன்பும் கருத்துப் பரிமாறுதல்க ளும் சுவையானவை.

''......மனக்கினிய பெருங்குணத்து நல்லத்பிப் பாவலன்'' என்று அழியாச் செய்யுளால் நற்சான்று பகர்ந்து விட்டேன். நீங்கள் எந்நாளும் தமிழ்த் தொண்டு புரிய வேண்டும்.... தமிழப் புலவராகிய நாம் கம்பனின் வழித் தோன்றல்கள். அவனைப் போல நாமும் மன்னனின் முன்னிலையில் இறுமாப்போடு நிற்க வேண்டும். நூலாராய்வதிலும் நூலெழுதுவதிலும் பொழுது கழிக்கவேண்டும் என்று கனிவாகக் கேட் டுக்கொள்கின்றேன்- என விபுலானந்த அடிகளார் முதுதமிழ்ப் புலவருக்கு எழுதிய கடிதம் கணிக்கத்தக்கதேயாகும்.

ஈழகேசரி மற்றும் தமிழகம் பத்திரிகைகளில் இலக்கண, இலக்கிய கட்டுரைகளை நிறையவே எழுதியவர். மாணவர் தமிழ் வாசகம் போன்ற பல தமிழ்ப் பாட நூல்களையும் எழுதி வெளியிட்டவர். சிறு வர் பாடல்களையும் பல தொகுதிகளாக வெளியிட்டவர்.

புலவர் அவர்கள் முஸ்லீம் புலவர்களைப்பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொண்டவர். அவற்றைத் தமது உரைகள் வாயிலாக வெளிப்படுத்தியவர். கரீம் புலவர், பக்கீர் முஹைதீன் புலவர் முதலிய இலங்கைப் புலவர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

1936 ஆம் ஆண்டில் தென்னிந்திய புனித சேத்திரங்களுக்கு யாத்திரையை மேற்கொண்டு இந்தியாவில் பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். சைவ ஆதீனங்களில் இவரது குரல் ஒலித்தது. இவரது நாவன்மைதனையும் பாவன்மைதனையும் வியந்த திரு நெல்வேலி தமிழர் கழகத்தார் இவருக்கு 1940இல் முதுதமிழ்ப் புலவர் என்றும் வரிசை நல் கிக் கௌரவித்தனர்.

**பல்கலைக் கழகத்தில் பயிற்றுவித்தார்**

ஈழநாட்டுக்குத் திரும்பிய புலவர் சில ஆண்டுகளின் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஆசானாகஇருந்து அரியசேவைசெய்தார்.

இவரது கவித்துவ ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாக இலங்கை அரசு நடத்திய மரதன் அஞ்சலோட்டக் கவிதைப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றுக் கொண்டதைக் குறிப் பிடலாம்.

இவர் சிறந்த தமிழறிஞராக விளங்கிய போதும் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி களிலும் தேர்ச்சிபெற்று விளங்கினார். தேசிய கீதத்தை முதன்முதலாகத் தமிழில் மொழி பெயர்த்து எழுதிய தைக் குறிப்பிட லாம்.

**கடம்பன்**

இன்னொன்று முதுதமிழ்ப் புலவர் அவர்கள் 1955ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் ஆற்றிய உரைக்காக கல்கி ரா.பி.சேதுப்பிள்ளை முதலிய அறிஞர்களால் மெச்சப்பட்டவர். கல்கியும், ரா.பி.சேதுப் பிள்ளையும் இவர் இறந்த செய்தி கேட்டு இவரைப் பற்றிப் பத்திரிகைகளில் வியந்து எழுதினார்கள். இத்தமிழ் ஆராய்ச்சி விழாவிற் கலந்து கொண்டமையே முதுதமிழ்ப் புலவரின் கடைசிப் பேச்சாகவும் அமைந் தது. *

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையாருக்கு நாளை தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.13

கருணாகரத் தொண்டமான் மன்னன் ஆட்சிக் காலத்தில் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப் மிக்க ஆலயமான உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் தேர் உற்சவம் நாளை பிற்பகல் 1மணிக்கு வெகு விமரிசையாக இடம்பெறவுள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப் பெருமைகளையும் கொண்டுள்ள இவ் வாலயத்தில் உள்ள புராதன கல்வெட்டுச் சாசனம் இவ் ஆலயத் தின் பழமையையும் பெருமையையும் எடுத்தியம்புவதை ஆய் வாளர்களும் அறிஞர்களும் உறுதிப்படுத் தியுள்ளனர்.

ஆலய திருப்பணி சபையினரின் முயற்சியினால் இவ் ஆலயத்துக்கென பெருஞ் செலவில் உருவாக்கப்பட்டுவரும் புதிய சித்திரத்தேரில்அடுத்த ஆண்டு உற்சவத் தின்போது கருணாகரப் பெருமான் வீதி உலா வரவிருப்பது குறிப்பிடத்தக்காகும். (50)

## இறுவட்டு வெளியீடு

சகோதரா எஸ். ஐ.யோசப்பின் 'நித்தியவெளிச்சம்' பாகம் II இறுவட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குருஅருட் திரு டி.அழகராசா தலைமையில் அல்வாய் மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தில் நடைபெற

## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம் நாதசுர வித்துவான்
**V.K கானமூர்த்தி**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினரின் துயரில்
நாமும் பங்குகொள்வதோடு
அவரின்
ஆத்மாசாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை
தவில் நாதசுர கலைஞர்கள்.

தவில் வித்துவான்
M.S.விஜயகுமார்.

(78413)

## ஓராண்டு நினைவலை அழைப்பு

மண்ணுலகில் 23 ★ 11 ★ 1933



விண்ணுலகில் 26 ★ 08 ★ 2007

**அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு**

திதி: 13.09.2008

ஆண்டொன்றானாலும்
ஆறாமோ எங்கள் துயர்தான்
லண்டனில் தங்கள் உயிர் பிரிந்து
ஓராண்டு ஓடிவிட்டாலும்
அகன்றா உ நினைவுகளால்
அல்லும் பகலும் நாமிங்கே
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இன்று (13.09.2008) சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தக்கடியன்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் விசேட பூசையும் நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் மதியபோசனமும் நடைபெறும். இந்த வைபவத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மனைவி - திருமதி கண்மணியும்,
மக்கள், மருமக்களும்
சகோதரி - திரு.திருமதி தம்பிமுத்து
தில்லைப்பிள்ளை.

கைதடி தெற்கு,
கைதடி.

(78414)

## மரண அறிவித்தல்கள்

### சாத்தையா நீலகண்டன்
**ஆசாரியார்**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சாத்தையா நீலகண் டன் ஆசாரியார் நேற்று முன்தினம் (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பவள்ளியின் அன்புக் கணவரும் வாமதேவன், மாதவன், பிரதாபன், அம்பிகா, காலஞ்சென்ற பிரசாந் மற்றும் சரணியா, நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அசோகன் காலஞ் சென்ற கிருஸ்ணா மற்றும் வேலு, நாகேஸ்வரி, வீரசேகர், சாந்தி ஆகியோரின் சகோதரனும், அபினயா, விஷ்ணு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.09.2008) வெள் ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நீ.வாமதேவன்.

### செல்லத்துரை டோமினிக் அலோசியஸ்
**(லின்ரன்)**



13, மவுன்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை டோமினிக் அலோசியஸ் (லின்ரன்) 09.09.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - றெஜீனா பூமணி தம்பதியரின் அன்பு மகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.09.2008) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொட்டாஞ்சேனை புனித வியாகுல மாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்க ஆராதனையின் பின் மாதப்பிட்டி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

B3 F25 105/29,
Bolemendhal Flats,
Kottahena, Colombo - 13.

(78417)

தகவல்:
குடும்பத்தினர்..

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நாகன் குஞ்சன்**

மலர்வு 18 ✱ 10 ✱ 1944

உதிர்வு 26 ✱ 08 ✱ 2007

**திதி: 13.09.2008**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
என்றென்றும் நிற்கும்
எமதருமைக் குலவிளக்கே

ஆண்டொன்று ஆனதய்யா
ஆயிரமாண்டுகள் கழிந்திடினும்
என்றும் உன் நினைவுகள்
எம்மை விட்டகலாது.

கு.சின்னப்பிள்ளை (மனைவி),
குடும்பத்தினர்.

வல்வெட்டித்துறை. (சி/554628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கற்பகம்' விற்பனை நிலையம் நேற்றுத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்;செப்.13

பனை அபிவிருத்தி சபையின் மற்றுமொரு விற்பனை நிலையம் 'கற்பகம்' என்னும் பெயரில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக யாழ். நகரில் திறந்து வைக்கப்பட்டது.

கே.கே.எஸ் வீதியில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய கட்டடத்திற்கு அருகாமையில் இந்த கற்பகம் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பனை உற்பத்திப் பொருள்கள், கைப்பணிப்பொருள்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தி பொருள்கள் என்பன இந்த கற்பகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

(202-224)

## அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் மேலும் 48 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளன

யாழ்ப்பாணம், செப்.13

அல்லைப்பிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக தங்கியுள்ள 48 குடும்பங்களை அவர்களது சுய விருப்பத்தின்படி மீளவும் அல்லைப்பிட்டியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலகம் தெரிவித்தது.

இவ்வாறு மீளவும் அல்லைப்பிட்டியில் குடியேற உள்ள இம்மக்களுக்கான குடிநீர் மற்றும் இருப்பிட வசதிகள் ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஹரித்தாஸ் வேல்ட்விஷன்,சோஆ ஆகிய நிறுவனங்களிடம் கோரப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தங்கியிருந்தவர்களில் 81 குடும்பங்கள் முதற்கட்டமாக ஏற்கனவே அங்கு மீளவும் குடியேறி வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(202-300)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,செப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட கல்வி செயலமர்வு இன்றும் நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் விசேடகல்விக்கு பொறுப்பான ஆசிரியர்களும், வழிகாட்டல் ஆலோசனைக்குப் பொறுப்பான ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்கான சிகிச்சை நிலையம் பருத்தித்துறையில் அமைப்பு

குருநகர், செப்.13

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்குமான சிகிச்சை நிலையம் ஒன்று பருத்தித்துறை ஆத்தியடியில் நிறுவப்படவுள்ளது. இத்தகவலை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இச்சிகிச்சை நிலையத்தை அங்கு அமைப்பதற்கான மதிப்பீட்டு வேலைகளை யாழ். கட்டடத் திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

பொதுமக்கள் சுகாதார சேவையை சுலபமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-51)

## பொலிஸாரிடம் அனுமதிபெற்று இரவில் ஒலிபெருக்கி பாவிக்கலாம்

### சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

இரவு 10 மணிமுதல் காலை 6 மணி வரை எந்த நிகழ்வுகளுக்கும் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற நீதிமன்ற உத்தரவு நடைமுறையில் இருக்கின்றபோதிலும், மேற்குறிப்பிட்ட நேரங்களில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்றால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அனுமதி பெற்றுப் பயன்படுத்தலாம் என்று சுற்றாடல்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் சேவைகள் திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இரவு 10 மணிமுதல் காலை 6 மணி வரை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. இந்த நீதிமன்ற உத்தரவிற்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை.

1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒலித்தடை தொடர்பான சட்டம்தான் இப்போது நடைமுறையில் உள்ளது.

இரவு 10 மணிமுதல் காலை 6 மணி வரை ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியே ஆகவேண்டும் என்றால் அருகில் உள்ள பொலிஸ் நிலைய அனுமதியைப் பெற்றுப் பயன்படுத்தலாம். இது 93 ஆம் ஆண்டு ஒலித்தடைச் சட்டத்தில் உள்ளது.

இது தொடர்பாக எவருக்கும் பிரச்சினை இருந்தால் அவர்கள் நீதிமன்றம் சென்று முறையிடலாம் - என்றார்.

அப்போது குறுக்கிட்ட ஐ.தே.கட்சி எம்.பி. காமினி ஜயவிக்ரம பெரேரா:-

நீங்கள் சொல்வதுபோல் இதற்குப் பொலிஸார் அனுமதிப்பதில்லை. அவர்கள் நீதிமன்ற உத்தரவைக் காட்டி அனுமதி தர மறுக்கின்றனர். அப்படியானால் எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் சமயஸ் தலங்களுக்கும் சுற்றறிக்கைகளை அனுப்புங்கள் - என்றார்.

இதில் நாம் தலையிட்டு சுற்றறிக்கை விட முடியாது. ஒலித்தடைச் சட்டத்தில் இது தெளிவாகவுள்ளது - என்றார் அமைச்சர் ரணவக்க. (சி)

## வெல்லம்பிட்டியவிலும் குண்டுவெடிப்பு ரயில் பாதையில் மாத்திரம் சிறிய சேதம்

கொழும்பு, செப். 13

வெல்லம்பிட்டியவில் உள்ள கறுப்புப் பாலத்துக்கு அருகே இருக்கும் ரயில் பாதையிலும் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் ரயில் பாதையில் மாத்திரம் சிறிய சேதம் ஏற்பட்டது என்றும், வேறு எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிப்புச் சத்தம் கேட்டவுடன் அங்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுப்பட்டனர்.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பாதையினூடான ரயில் போக்குவரத்துக்கள் நேற்று இரவு முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரும் பொலிஸாரும் மேலதிகத் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை, கல்கிசை, டீ றாம் வீதியில் உள்ள ரயில் பாதையில் நேற்று முன்தினம் இரவு குண்டுவெடிப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பாஷையூர் பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

குருநகர்,செப்.13

பாஷையூர் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 30 ஆயிரம் ரூபாவும்-

பாஷையூர் புனித அந்தோனியார் முன்பள்ளிக் கட்டட மீள் புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் மூலம் அவர் இந்த நிதி ஒதுக்கீட்டை செய்துள்ளார். (202-51)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வறிய மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மேற்பார்வை குடும்பநல சேவையாளர் செல்வி வீ. பாலாம்பிகை மாணவியொருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குகின்றார். அருகில் யாழ்.பிராந்திய மலேரியா ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி க.தா.சிவபாதம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. பரமேஸ்வரன், லயன்ஸ் கழகப் பிரதிநிதிகளான லயன் கா. சற்குணதேவன், லயன் எஸ்.கே. நவரத்தினம், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் து. கிளின்டன் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்:தென்னவன்)

## வன்னி அகதிகளின் நிலைமை தொடர்ந்தும் மோசமடைகின்றது

### ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.கவலை

கொழும்பு, செப்.13

வன்னியில் அகதிகளாக்கப்பட்டுள்ள மக்கள் அத்தியாவசிய தேவைகள் எவற்றையும் பெற்றுக் கொள்ள முடியாமல் அவலப்படுகின்றனர். இம்மக்களின் நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வருகின்றமை மிகவும் கவலைக்கிடமானதாகும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது இடம்பெற்றுவரும் கொடூர யுத்தத்தால் வன்னிக்குச் செல்லும் பிரதான தரைமார்க்கமான ஏ-9 மூடப்பட்டுள்ளது இதனால் வன்னியில் அகதிகளாக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் உணவு, நீர், மருந்து போன்ற அத்தியாவசிய தேவைகள் அற்ற நிலைமையில், தற்காலிகமான இருப்பிடங்களில் பெரும் சிரமத்துடன் வசித்து வருகின்றனர். இவர்களுள் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், முதியோர், குழந்தைகள் போன்றோர் உள்ளடக்கப்படுவர்.

வன்னியில் தற்போதைய உண்மையான நிலைமையைப் மேற்பார்வையிட மன்னார் மேற்றானியார் அப்பிரதேசங்களுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். எவ்வித கட்சிபேதங்களுமற்ற மதகுருவான மன்னார் மேற்றானியார் வன்னியில் அகதிகளாக அல்லல்படும் மக்களின் நிலைமை தொர்பாக வெளியிட்டுள்ள விடயங்கள் கவலைக்கிடமானதாகவுள்ளது. அதன்படி வன்னியில் அகதிகளாக்கப்பட்டுள்ளோரின் தொகை 150,000 இற்கும் அதிகமாகும். 7 ஆவது மைல் கல்லிலிருந்து ஏ-9 பாதையிலிருந்து மேற்கு பகுதிக்கும், ஓமந்தையிலிருந்து முறிகண்டி பிரதேசத்திற்குமாகவே இந்த மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

#### போஷாக்கின்மையால் குழந்தைகள் பாதிப்பு

அகதிகளாக்கப்பட்ட இந்த மக்கள் அடிப்படை வசதிகள் மட்டுமின்றி, மலேரியா, சிறுநீரக கோளாறு போன்ற எண்ணற்ற தொற்று நோய்களாலும் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய்களால் பெரும்பாலும் குழந்தைகளே அல்லல்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழந்தைகள் போஷாக்கின்மையாலேயே அதிகம் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இம்மக்களுக்கு அரச ஊழியர்கள் மூலம் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்கள் தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்கான உபகரணங்கள் போன்றன பற்றாக்குறையாகவே உள்ளன. இப்பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அரசால் விநியோகம் செய்யப்படுகின்றன. இம்மக்களின் நிலைமை மிகவும் மோசமடைந்து வருவது கவலைக்கிடமாகவுள்ளது. இந்த அல்லல்படும் அப்பாவி மக்களின் துயர்துடைக்க எண்ணி உதவிக்கரம் நீட்டும் மதகுருக்கள், சமூக சேவை நிலையங்களுக்குக் கூட அங்கு சென்று உதவி புரிய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது-என்றுள்ளது.

## யாழ். ப.நோ.கூ சங்கம் வர்த்தகத்தை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல; நலிவுற்றோருக்குக்கான நலன் திட்டங்களையும் முன்னெடுக்கின்றது

### சங்கத்தின் தலைவர் கிரிதரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வர்த்தக நடவடிக்கைகளை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. நலிவுற்றோரின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங் களையும் செயற்படுத்தி வருகின்றது.

சங்கத்தின் தலைவரும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசத்தின் தலைவருமான ப. கிரிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊக்குவிப்பு பரிசு வழங்கும் நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எதிர்காலத்தில் சங்கத்தின் சகல விற்பனை நிலையங்களிலும் அதிக விற்பனை மேற்கொள்வதற்கு சகல பணியாளர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

அவ்வாறு ரொக்க விற்பனையை அதிகரிப்பதன் மூலம் சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

தற்போது இந்தச் சங்கம் கடந்த காலங்களை விட பல்வேறு தரப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதில் எமது கூட்டுறவு நடமாடும் விற்பனை நிலையம் சிறந்த சேவையை மேற் கொண்டு வருகின்றது.

இந்த நடமாடும் சேவை நிலையம் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரச திணைக்களங்களுக்குச் சென்று அங்குள்ள பணியாளர்களுக்கு பொருள்களை விநியோகித்து வருகின்றது. இதனால் அவர்கள் நியாய விலையில் பொருள்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.இந்த நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் வருங் காலத்தில் விஸ்தரிக்கப்படும்- என்றார்.

இந்த சங்கம் கடந்த காலங்களை விட தற்போது வளர்ச்சியடைந்து வரும் நிலையில் நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சங்கத்தின் எல்லைக்கு உட்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு ஏதாவது ஒரு திட்டம் ஒன்றை உருவாக்கி அதை செயற்படுத்துவதற்கு சங்கம் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.



அவ்வாறு கூட்டுறவில் இணைந்த ஒவ் வொரு கூட்டுறவுப் பணியாளர்களும் சேவை மனப்பான்மையுடனும் இதய சுத்தியுடனும் செயலாற்ற வேண்டும்.

கூட்டுறவில்அதிக ரொக்க விற்பனையை மேற் கொண்டு சங்கத்தை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் பணியாளர்களுக்கான சகல கொடுப்பனவுகளையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-224)

## கடைசி பஸ் சேவை பி.ப. 5.30 மணிக்கு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சகல பகுதிகளுக்குமான இறுதி பஸ் சேவை தினமும் பிற்பகல் 5.30 மணிக்கு நடைபெற்று வருகிறது.

அத்துடன் உள்ளூர் போக்குவரத்துச் சேவை தற்போது சீராக நடைபெற்று வருவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் தெரிவித்தார். (202-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கலை கலாசாரங்களை அழியவிடாமல் பாதுகாக்க வேண்டும்

## வலி.மேற்கு கலாசார விழாவில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.13

எமது பாரம்பரியக் கலைகளுக்கு புத்துணர்வு ஊட்டி அவற்றின் சிறப்பை உலகுக்கு எடுத்துக்காட்டுவணவாக நடைபெற்றது வலி. மேற்கு பிரதேச கலை இலக்கிய விழா.

பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஆசியுரை நிகழ்த்திய சிவஸ்ரீ சு.சுந்தராஜக் குருக்கள் தனதுரையில்,

கலாசாரம் என்பது தெய்வீகம் பொருந்தியது; பாரம்பரியமானது; சமயத்தோடும் தமிழோடும் ஒன்றிணைந்தது. இவ்விழா எதிர்காலச் சந்ததிக்கு வழிகாட்டி. நாம் எமது இசை, நாட்டுக்கூத்து, புராணபட்டனம் போன்ற கலைகளை வளர்க்க வேண்டும். கலைகளை அழியாமல் பாதுகாக்க வேண்டும். இதில் புராணபடனம் அருகிவருகின்றது - என்றார்.

பேராயர் கலாநிதி. எஸ்.ஜெபநேசன் ஆசியுரையில் கலை மிக அவசியமானது. அதனைக் காப்பாற்றுவது அவசியம். இதனை இங்குள்ளவர்களால் மட்டுமே செய்ய முடியும். ஏனெனில் வெளிநாடுகளில் இருப்பவர்கள் இம்மாதிரியான விழாக்கள் எடுக்கும் போது செயற்கைத் தன்மை இருப்பதால் எந்தவித உணர்ச்சிகளுமில்லை; அர்த்தமும் இல்லை. நம் நாடு தூய தமிழ் பேசப்படும் நாடு - என்றார்.

**கலைகளைக் காப்பாற்றுவது அவசியம்**

விருந்தினர்களை வரவேற்று நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளான கம்படி, சிலம்படி, செம்பு நடனம், வேப்பிலை நடனம், கரகம், காவடி, பொய்க்காலாட்டம், குதிரையாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக இருந்தமையால் இவ்விழா தினமும் நடைபெறாதா என்ற அளவிற்குத் தான் மகிழ்ச்சியில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சைவசித்தாந்த பண்டிதர் சி.பொன்னம்பலவாணர் உரையாற்றுகையில் நாம் எமது கலாசாரத்தை வேறு கலாசாரங்களுடன் கலக்காது வாழப் பழகவேண்டும் என்பதை சிறந்த உவமான உவமேயங்களோடு எடுத்துக் கூறினார். பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர் சூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

பிரதேச செயலர் உரையாற்றுகையில் கலாசாரம் இனத்தின் அடையாளம். இது தனித்துவமானது. தமக்கு என்று ஒரு வழிமுறை உள்ள இனந்தான் நீடித்து வாழும். இல்லாது விடின் நலிவடைந்து அழிந்து போகும். மற்றும் இவ்விழா மூலம் இலை மறை காயாக இருக்கும் கலைஞர்களை புத்தாக்குவதற்கும், சிரேஸ்ட கலைஞர்களைக் கௌரவிப்பதற்கும் வழிசமைக்கிறது - என்று கூறினார்.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரைஎங்கரசு உரையாற்றுகையில், நாம் 25 வருட போராட்ட நிலையில் வாழ்ந்து இடைஞ்சலுக்கு மத்தியில் இவ்விழா எடுப்பது போற்றுதற்குரியது. மேலும் இசையை அல்லது கலையை இரசிக்கின்ற உணர்வு எல்லோருக்கும் உரியது. அதாவது அன்று சாதாரண தொழிலாளி தனது பிள்ளைக்கு ஓர் இசைநிகழ்ச்சியை அரங்கேற்றினார். அதற்கு அப்போதைய அமைதியான அரசியல் சூழல் உதவியது. இன்று அவ்வாறில்லை. பழைய நாடகங்கள் மீண்டும் மீண்டும் மேடை ஏற்றப்பட வேண்டும். அதற்குரிய நுட்பங்களை பேண வேண்டும். இது ஒரு கலைக்கு வலுவூட்டல் நிகழ்வாகும் - என்றார்.

**சமுதாயத்தின் முத்திரைகள்**

மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கூறுகையில் இவ்விழா இப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இவை சமுதாயத்தின் முத்திரைகள். இளைஞர்களுக்கு தமது திறமைகளை வெளிக்கொணர்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றது. கலைஞர் கௌரவிப்பு தவறாது செய்ய வேண்டும். அவர்கள் தமது அனுபவங்களை பகிர்வார்கள். நமக்கு வழிகாட்டுவார்கள் - என்று கூறினார்.

பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தனதுரையில், இப்பிரதேசம் குறிப்பாக வட்டுக்கோட்டை கல்விப் பாரம்பரியம் மிக்கது. யாழ்ப்பாணக்கல்லூரியின் பெருமைக்கு வழிசேர்க்கும் வகையில் அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் குறிப்பிட்ட மேற்படி பல்கலைக்கழகத்தில் 150 வருடங்களுக்கு முன்பு முதலிரு பட்டதாரி மாணவர்களும் S.Y. தாமோதரம்பிள்ளை, கரோல்ட் (சங்கானை) யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவர்களே - என்று கூறினார்.

வட்டுக்கோட்டை, பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் ஊஞ்சல் பாட்டே யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற ஒல்லாந்தர் காலத்திற்கு முற்பட்டது, மிகப்பழைமை வாய்ந்தது - என்றும் கூறினார்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தனது உரையில் தற்போது தங்கி வாழல் கலாசாரம் அதிகரித்துக் கொண்டு செல்வதாகவும் வயோதிபர் இல்லம், சிறுவர் இல்லம் போன்றவை அதிகரித்தல் பற்றியும், சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் ஒழுங்காகக் கலாசாரத்தை பேணவேண்டும். இதன் மூலமே நல்ல சமூகம் கட்டியெழுப்பப்படும் என்று கூறினார்.

(202-119)

## சாவகச்சேரி முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கு மரங்களில் செய்யப்பட்ட கற்றல் உபகரணங்களும், சமையல் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வாளிகள், பிளாஸ்ரிக் கோப்பை , குவளைகளும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் முன்பள்ளி ஆசிரியைகளிடம் இப்பொருள்களை வழங்கினார்.

கற்றல் உபகரணங்களை யுனிசெப் நிறுவனமும், பிளாஸ்ரிக் பாத்திரங்கள் உட்பட ஏனையபொருள்களை போரூட் நிறுவனமும் முன்பள்ளி சிறார்களுக்கென நகரசபையிடம் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

**உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு உள்ளக இடமாற்றம்**

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடைமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் மாவட்ட உள்ளூராட்சிசபைகளிடையே உள்ளூராட்சிஆணையாளரால் உள்ளக இட மாற்றம் செய்யப்படவுள்ளனர். இடமாற்றல் பெற விரும்பும் உத்தியோகத்தர்களின் விவரங்களை ஒரு வாரத்தினுள் அனுப்பிவைக்குமாறு யாழ.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளது



புகழ் பூத்த நாதசுரக் கலைஞர் கலாபூஷணம் வி.கே. கானமூர்த்தியின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்

# புலிகளின் விமானத் தாக்குதலில் இந்தியர் இருவருக்கு காயமா?

## டில்லி அரசிடம் விளக்கம் கோருகிறார் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்

கொழும்பு, செப். 12

"விடுதலைப் புலிகளின் தாக்குதலில் காயமடைந்த இந்தியர் இருவரும் யார் என்பதை இந்திய அரசு தெளிவான விளக்கத்தைத் தரவேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிரச்சினை இந்திய நாடாளுமன்றத்தில் கிளப்பப்படும்."

- இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் ராஜா தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் நேற்றிரவு பி.பி.சி. தமிழோச்சைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

சில நாட்களுக்கு முன்னர் இலங்கையின் வவுனியா நகரில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இந்தியர் இருவர் காயமடைந்தனர். அவர்கள் இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது இராணுவ உதவியை செயற்படுத்துகின்ற சிவிலியன்களா என்ற விவரங்கள் போதுமானதாக இல்லை.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களில் இவர்களின் பங்கு என்ன என்பது குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்திய அரசினிடையே பல சந்தேகங்கள் இயல்பாகவே எழுகின்றன. எனவே, இந்திய அரசு தன்னுடைய நிலையை தெளிவுபடுத்தவேண்டும். இதற்கு இந்திய அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது என்பது -இன்று கேள்வியாக மாறியிருக்கிறது.

அந்தப் பகுதியில் இந்தியர்கள் இருவர் மாத்திரம்தான் இருக்கிறார்கள் என எடுத்துக்கொள்ளமுடியாது. இன்னும் பலர் அங்கு இருக்கக்கூடும். அதனால்தான் இந்திய அரசு தன்னுடைய நிலையை தெளிவுபடுத்தவேண்டும். இவர்கள் இருவரும் அங்கே ஏன் இருந்தனர்? இவர்களுக்கு அங்கு என்ன வேலை? இவர்கள் காயப்பட்டதற்கு இந்திய அரசுதான் பொறுப்புக் கூறவேண்டும்.

இலங்கை குறித்து - இலங்கையில் நடைபெறுகின்ற போரைக்குறித்து - இந்தியாவின் அணுகுமுறை குறித்து பல இயல்பான சந்தேகங்கள் எழுவதற்கு நியாயங்கள் உண்டு.

இந்தப் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசு சரியான விளக்கத்தை தராவிட்டாலர் இது இந்திய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் - என்றார்.

(அ-சி)

# வடமாகாணத்தில் சிறப்புச் சேவையாற்றிய சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது

யாழ்ப்பாணம், செப்.13

இலங்கை சாரணர் சங்கம் வடமாகாணத்தில் சாரணியத்தில் சிறப்புறப் பணியாற்றியவர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவ் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாரணர் சங்க பிரதம ஆணையாளர் சி.பற்றுவாஞ்சலி கலந்து கொண்டு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

விருது பெற்றவர்களின் விவரம் வருமாறு:

எஸ்.விஜயராகவன் (வட்டு.மத்திய கல்லூரி), பி.பிரியசாந் (வயாவிளான் ம.ம.வி), வி.செந்துறூபன் (காங்கேயன் சாரணர் குழு), எஸ்.பிரசாந்தன் (காங்கேயன் சாரணர் குழு), ஜே.ஜெயந்தன் (மகாஜனக் கல்லூரி), ஏ.தர்சன் (யூனியன் கல்லூரி), ஆர்.அஜன் (யூனியன் கல்லூரி), என். தேவறூபன் (யூனியன் கல்லூரி), ஜே.எட்வின் ஜெயராஜ் (மானிப்பாய் மெ.ஆ.ப), ரி.விஜய ரமணன் (வியாவிளான் ம.ம.வி.), கே.சுஜீவன் (மகாஜனக் கல்லூரி), எஸ்.சுரேன் (மகாஜனக் கல்லூரி), எஸ்.லக்மன் (யூனியன் கல்லூரி), ஜி.அபயன் (மகாஜனக் கல்லூரி), ஜே.ரெசிகேசன் (ஹாட்லிக் கல்லூரி), கே.தேவகுமார் (ஹாட்லிக் கல்லூரி), ஏ.சுதர்சனன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சுயந்தன் (ஹாட்லிக் கல்லூரி), பி.பிரேம்குமார் (வேலாயுதம் ம.வி.), ரி.கிருபாகரன் (ஹாட்லிக் கல்லூரி), வி.விபுலன் (யாழ். இந்துக் கல்லூரி), ஏ.டிலீபன் (சென்.ஜேன்ஸ் கல்லூரி), கே.அமலன் (சென்.ஜேன்ஸ் கல்லூரி), என்.ஐங்கரேசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.அபலாஜான் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஆர்.தேமரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ரி.கெல்றோன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஈ.பி.சுகிர்தனன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.மயூரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி),ஏ.திலீப்குமார் (வவுனியா தமிழ் ம,ம.வி.), வை. கஜேந்திரன் (வவுனியா தமிழ் ம.ம.வி.), எஸ்.ஆனந்தசிறி (வவுனியா தமிழ் ம.ம.வி.), எஸ்.ராஜன்மனோ (வவுனியா தமிழ் ம.ம.வி.), வி.வசந்தறூபன் (வவுனியா தமிழ் ம.ம.வி.), விஜேயராஜ் (வவுனியா தமிழ் ம.ம.வி.), வி.கேதீசன் (பூநகரி ம.வி.), கே.பிரசாந் (இராமநாதபுரம்ம.வி.)

(202-325)



வல்வை சிதம்பரக் கல்லூரியில் நடைபெற்ற மு.ஆ.சுமனின் 'வாழ்வுதனைத் தேடி' கவிதை நூலின் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்
நிகழ்வில் வல்வை கலைச்சோலை புத்தகசாலையின் உரிமையாளரும் எழுத்தாளருமான கு.அப்புத்துரை, நிகழ்வின் பிரதம விருந்தினரான பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், எழுத்தாளர் சண்முகன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். நூலின் முதல் பிரதியை இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் சிவரட்னத்தின் பாரியார் வசந்தி பிரதம விருந்தினரிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் நூலாசிரியர் மத்தியில் [illegible]தையும் நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்திச் சந்தைப்படுத்த முதலீட்டாளர்களும் தொழில் முயல்வோரும் முன்வரவேண்டும்

## யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் புத்தாக்கக் கண்காட்சி தொடர்பான ஓர் அறிமுகம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு மிக அவசியமானதொன்றாகும். வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது புதியன கண்டுபிடித்தலும் அவற்றிக்குப் பழக்கப்படுவதும் ஒவ்வொரு தேசத்தினதும் சமூக, பொருளாதார, கைத்தொழில் வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளதைக் காணலாம். ஆயினும் புதிய கருத்துக்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆர்வத்தோடு அல்லது பாராட்டுதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று கூறமுடியாது. வரலாற்றின் பல சந்தர்ப்பங்களில் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் தழுவிய பல புதிய கண்டுபிடிப்புகள் எவ்வித தயக்கமும் இன்றி வெறுத்து ஒதுக்கப்பட்டதென்பதற்கும் அத்தகைய புதிய கண்டுபிடிப்புகள் வேண்டுமென்றே மழுங்கடிக்கப்பட்டதென்பதற்கும் பல்வேறு உதாரணங்கள் உள்ளன. ஆனால் அதிர்ஷ்டவசமாக இன்று நிலைமை மாறியுள்ளது. அரசாங்கம் மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் புதிய கண்டுபிடிப்புகளை ஆர்வத்துடன் அங்கீகரிப்பதோடு அவற்றைப் பயன்படுத்தவும் அத்தகைய கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்காக உதவியளிக்கவும் முன்வருகின்றன.

**இனம்கண்டு உற்சாகப்படுத்த**

எமது நாட்டிலும் அரசாங்கமானது புத்தாக்குநர்களை இனம்கண்டு உற்சாகப்படுத்தவும் இலங்கையரின் நிர்மாணத்துறையை விருத்தி செய்வதற்கும் கட்டியெழுப்புவதற்கும் 1979ஆம் ஆண்டில் 53ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டத்தினால் கைத்தொழில் அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின்கீழ் இயங்கக் கூடியவாறு இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவை அங்குரார்ப்பணம் செய்து வைத்தது.

இந்த ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கங்களாவன: புத்தாக்குநர்களைச் சட்டரீதியாக முன்கொண்டுவரல், எவ்வித வேறுபாடுமின்றி ஒவ்வொரு மனிதனையும் புத்தாக்குநராக மாற்றுவதற்குத் துணைபுரிதல், புத்தாக்குநர்களை கௌரவப்படுத்தலும், விருதுகளைப் பெற்றுக்கொடுத்தலும், தேசிய புத்தாக்கங்களை வர்த்தகமயமாக்குவதற்குப் பூரண ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல், புத்தாக்குநர்களின் ஆக்கங்களுக்குப் புலமைச்சொத்து பாதுகாப்பினைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவையாகும்.

**ஆணைக்குழுவின் செயற்பாடுகள்**

இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவானது ஒவ்வொரு வருடமும் கண்டுபிடிப்பாளருக்காக ஜனாதிபதி, தேசிய விருதுப் போட்டிகளை நடத்தி அவர்களுக்குப் பணப்பரிசு, பதக்கம், சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்குகிறது. இதன்மூலம் தெரிவு செய்யப்படுகின்ற புத்தாக்குநர்களுக்கு ஆக்கவுரிமைப் பத்திரத்தினைப் பெற்றுக்கொடுப்பதுடன், அதனை நல்லமுறையில் உயர்மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கும் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச்செல்வதற்கும் ஜனாதிபதி நிதியினால் நிதியுதவி பெற்றுக்கொடுக்கிறது.

இவ்வாறான உயரிய நோக்கத்துடன் 2003ஆம் ஆண்டு முதன்முதலாக இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் புத்தாக்கக் கண்காட்சியொன்றை யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தினர். அக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த என்.பிரசாத் என்ற மாணவனது புத்தாக்கம் இங்கும், தேசிய மட்டத்திலும் பதக்கங்களைப் பெற்றதோடு, சர்வதேச மட்டத்திலும் பரிசுகளை வென்று தமிழ் மண்ணிற்குப் பெருமை சேர்த்தது. அதன்பின்னர் இந்த வருடமே இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணத்தில் அவ்வாறானதொரு கண்காட்சியை நடத்துவதற்கு கல்வி அமைச்சுடன் இணைந்து ஆயத்தங்களை மேற்கொள்ளுகிறது.

இக்கண்காட்சி இம்மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியை 16.09.2008 அன்று காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு.கே. கணேஷ் அவர்கள் வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார். போட்டியில் வெற்றியடைந்த புத்தாக்குநர்களுக்கான விருதுகளை 17.09.2008 அன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள் வழங்குவார். இக்கண்காட்சியை மாணவர்கள், ஆசிரியர்கள் பார்வையிடுவதற்காக ஒவ்வொரு வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வெவ்வேறு நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**புத்தாக்கங்களின் அவசியம்**

மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி எமது நாட்டின் ஒவ்வொருவரும் புத்தாக்கங்களை உருவாக்கி நாட்டின் அபிவிருத்திக்கு ஏதோவொரு விதத்தில் பங்களிப்புச் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்குச் சரியான முறையில் சிந்தித்து, தரமான அதேநேரம் உண்மையிலேயே புதிதான கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை புத்தாக்கக் கலாசாரம் இங்குள்ள மக்களின் இரத்தத்துடன் இரண்டறக் கலந்துள்ள ஒரு விடயமாகும். கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக அவர்கள் எதிர்கொண்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஏராளமான கண்டுபிடிப்புகளை உருவாக்கியிருந்தார்கள். ஆயினும் அவை சரியான முறையில் நெறிப்படுத்தப்பட்டு உண்மையானதொரு புத்தாக்கம் என்ற நிலையை அடையமுன்னரே கைவிடப்பட்டுவிட்டன என்பதுதான் வேதனையைத் தருகிறது.

**நல்ல சந்தர்ப்பம்**

ஆயினும் கடந்த காலத்தையிட்டுக் கவலைப்படுவதைவிட, இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவினர் முன்னெடுக்கும் ஆக்கமுயற்சியை எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பமாக நாம் முன்னெடுத்து எமது திறமையை வளர்த்தெடுக்கவேண்டும். எனவே காலமெல்லாம் அந்நிய பழக்கவழக்கங்களைத் தழுவிய செயற்பாடுகளில் தங்கியிருப்பதைக் கைவிட்டு நாம் சுயமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டிய காலம் வந்துவிட்டது. சோம்பேறித்தனத்திலிருந்து விடுபட்டு ஊக்கத்துடன் விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் மீது அக்கறை செலுத்த வேண்டும்.

ஜப்பான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள், பதிவு செய்துகொள்வதற்காக வருடமொன்றில் 30,000 இற்கு மேற்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை முன்வைக்கின்றபோது நம்மால் 30 கண்டுபிடிப்புகளையேனும் முன்வைக்கமுடியாதா? பாடசாலை மாணவர்களிடையேயும் ஏனையோரிடையேயும் ஆக்கத்திறன்களை ஏற்படுத்தி நிலைபெறச் செய்தல் என்பது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் சமூகத்தினதும் ஊக்குவிப்பு மற்றும் சந்தர்ப்பமளித்தல் ஆகிய செயற்பாடுகளிலேயே தான் தங்கியுள்ளது.

எனவே ஆக்கத்திறன்களை வளர்த்து நிலை பெறச் செய்வதற்காக நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு வழியில் பங்களிப்பை வழங்கவேண்டும். எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள புத்தாக்கக் கண்காட்சிப் போட்டியில் மாணவர்கள் பல அரிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு பரிசுகளைப் பெறுவதோடு நின்றுவிடாமல், அவர்கள் தமது கண்டுபிடிப்புகளை உற்பத்திப் பொருள்களாக சந்தைப்படுத்தவும் வேண்டும். அவ்வாறு தொடர்ந்து செய்யும் போதுதான் நாமும் ஜப்பான் போன்றதொரு அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் ஆகமுடியும்.

மேலும் இக்கண்காட்சிப் போட்டி நடைபெறும்போது இங்குள்ள முதலீட்டாளர்கள், கைத்தொழில் முயற்சியாளர்கள் போன்றோர் முன் அனுமதி பெற்று அவற்றைப் பார்வையிட்டு, அக்கண்டுபிடிப்புகளை சந்தைப்படுத்தவும் முன்வரவேண்டும். மக்களும் அவ்வுற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகிக்கவேண்டும். அப்போதுதான் எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதோடு, ஆக்கபூர்வமானதொரு விஞ்ஞான கலாசாரத்தையும் வளர்க்கமுடியும். நாம் எல்லோரும் சேர்ந்து அதற்காக பாடுபடுவோம் வாருங்கள்! ★

**கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்**
யாழ்.பல்கலைக்கழகம்.

# அணுகுண்டுச் சோதனை நடத்தும் உரிமை இந்தியாவுக்குண்டு என்கிறது அமெரிக்கா

புதுடில்லி,செப்.13

இந்தியா அணுகுண்டுச் சோதனை நடத்த முடியும். அதற்கான அனைத்து இறையாண்மை உரிமைகளும் இந்தியாவுக்குள்ளன.

- இவ்வாறு இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டேவிட் முல்பர்டு தெரிவித்துள்ளார்.

அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதால், அணுகுண்டுச் சோதனை நடத்தும் உரிமையை இந்தியா இழந்துவிட்டது என இடதுசாரிகள் மற்றும் பாரதீய ஜனதா தலைவர்கள் கூறி வருகின்றனர். அணு எரிபொருள்கள் வழங்கும் நாடுகளிடம் அனுமதி பெறும்போது, 'இந்தியா அணுகுண்டுச் சோதனை நடத்தாது' என்று வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், தனியார் ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் டேவிட் முல்பர்டு பேட்டி அளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது முல்பர்டு மேலும் கூறுகையில், ''இந்தியா அணுகுண்டுச் சோதனை நடத்தமுடியும். அதற்கான அனைத்து இறையாண்மை உரிமைகளும் இந்தியாவுக்கு உள்ளன. இது தொடர்பாக ஒருபோதும் விவாதிக்கப்படவில்லை. அணு எரிபொருள்கள் வழங்கும் நாடுகள் கூட்டமைப்பில் விலக்குப் பெற்றதால், உலகளாவிய அணு வர்த்தகத்தில் இந்தியாவும் பங்குபெற முடியும்''

- என்றார். (சி)

# ஈழத்தமிழரைக் கொல்லும் இலங்கை அரசுக்கு இந்தியா இராணுவ உதவிகள் அளிக்கக் கூடாது

## மத்திய அரசிடம் முதல்வரை வலியுறுத்தக் கோருகிறார் ராமதாஸ்

நெல்லை,செப்.13

ஈழத்தமிழர்கள் மீது குண்டுமழை பொழிந்து அவர்களைக் கொன்று குவிக்கும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு எந்தவித இராணுவ உதவிகளையும் அளிக்கக் கூடாது.



- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசைப் பொறுத்தவரை ஈழத்தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. தமிழர்கள் என்றாலே எதிரியாகக் கருதுகின்றது.

எனவே, இலங்கைக்கு எந்தவித இராணுவ உதவிகளையும் அளிக்க மாட்டோம் என்ற உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக முதல்வர் கருணாநிதி வலியுறுத்தவேண்டும் என்றும் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நெல்லையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பா.ம.க. மகளிர் மது ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த ராமதாஸ், பாளையில் வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போதே இதனைத் தெரிவித்தார். பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மத்திய அரசு சார்பில் சிங்கள இராணுவத்துக்கு, எந்தவித உதவியும் செய்யவில்லை என்று இதுவரை மத்திய அரசு கூறிவந்தது. ஆனால் கடந்த திங்களன்று வவுனியாவில் நடந்த தாக்குதலில் இந்திய ராடர் கருவிகள் சேதம் அடைந்துள்ளன எனவும், அதை இயக்கிவந்த இந்திய பொறியியலாளர்கள் 2 பேர் காயமடைந்து இருக்கின்றனர் எனவும் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் மத்திய அரசு இலங்கை இராணுவத்திற்கு ஆதரவாக ஆள்களை அனுப்பி வைத்திருப்பது இங்குள்ள இந்தியத் தமிழர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் செயலாகும். உடனடியாக போர்முனையிலுள்ள இந்தியர்களைத் திரும்ப அழைக்கவேண்டும்.

மத்திய அரசு இலங்கைக்கு எந்தவித இராணுவ உதவியையும் அளிக்கக்கூடாது. அளிக்கமாட்டோம் என்ற உறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத்த வேண்டும். சிங்கள அரசுக்கு அவர்களுக்குப் புரிகின்ற மொழியில் முதல்வர் கண்டனம் தெரிவிக்கவேண்டும்.

இதுவரை தமிழக முதல்வர் மௌனமாக இருந்தது போதும், மௌனத்தைக் கலையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்

- என்றார்.

# தொழில் வளங்கள் மாவட்டத்தில் இப்போது தொய்வடைந்துள்ளதால் பயிற்சி பெற்ற அனைவருக்கும் உரிய வேலை வழங்க முடியவில்லை

## நிலைமையை விளக்குகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், செப்.11

தொழிற்பயிற்சி பெறும் அனைவருக்கும் தொழில் வாய்ப்பை வழங்கமுடியாத நிலை உள்ளது. போதிய தொழில் வளங்கள் எமது மாவட்டத்தில் தொய்வடைந்துள்ளமையே இதற்குக் காரணம்.



இவ்வாறு தெரிவித்தார் யாழ். அரச அதிபர் கே.கணேஷ்.

கைதடி நுணாவில் அறவழி நிலைய வளாகத்தில் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட கற்றல் வள பயன்பாட்டு மையக் கட்டடத்தின் திறப்புவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொருவரும் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வகையில் தொழில் பயிற்சிகளைத் தேர்ந்தெடுத்து முழுமையாகப் பயில வேண்டும். அதன்மூலம் நாட்டின் வேலையில்லாப் பிரச்சினை தீர்வதுடன் பொருளாதார மேம்பாடும் ஏற்படும்.

கட்டட நிர்மாணம், வீட்டு மின் இணைப்பு, நீர்க்குழாய் பொருத்தல், மின்வாயு ஒட்டு போன்ற பயிற்சிகள் பெற்ற பலர் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக தாம் பெற்ற பயிற்சியினைச் செயற்படுத்த முடியாமல் உள்ளனர். இவ்வாறான பயிற்சிகள் ஆண்கள் மட்டுமே பெறுகின்றனர். தொழிற்பயிற்சி என்பது அனைவரும் அதாவது இரு பாலாரும் பெறவேண்டும் என்ற நோக்கிலேயே வழங்கப்படுகின்றன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இவ்வாறான தொழில்களில் ஆண்களே ஈடுபடுகின்றனர். கட்டட நிர்மாணம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்தல் உட்பட அனைத்துப் பயிற்சிகளையும் இருபாலாரும் பெறவேண்டும்.

மக்களுக்குப் பொதுச் சேவை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறவழிப் போராட்டக் குழு இன்று பாரிய தொழிற்பயிற்சி நிலையமாக மாறியுள்ளமை பாராட்டுதற்குரியது. கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினருடன் இணைந்து இளைஞர், யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சி வழங்கும் பாரிய பணியினை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 30 மாத காலத்தில் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்குத் தொழிற்பயிற்சி வழங்கிச் சாதனை புரிந்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேசம் யுத்தத்தினால் அழிந்த காலத்தில் அறவழி நிலையத்தின் வளங்களும் அழிந்தபோதிலும், அதன் உன்னத பணியினால் இன்று தலை நிமிர்ந்த கட்டடங்களைக் கொண்ட தொழிற்பயிற்சி மையமாகக் காட்சி தருகின்றது.

இந்த வளங்கள் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட போதிலும் இதன் பயனைப் பெற வேண்டியவர்களும் அதனைப் பாதுகாக்க வேண்டியவர்களும் தென்மராட்சிப் பிரதேச மக்களே. பிரதேச மக்கள் வழங்கும் முழுமையான பங்களிப்பு, ஒத்துழைப்பு போன்றவற்றினால் இந்த நிலையத்தினர் மேன்மேலும் பல சேவைகளை வழங்க முடியும் - என்றார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புப் படி

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படவுள்ளது.

போரூட் நிறுவனத்தினர் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் இக்கொடுப்பனவினை யாழ்.பிராந்திய உள்ளூராட்சிச் உதவி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக அந்தந்த உள்ளூராட்சி சபைகள் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, முன்பள்ளிச் சிறார்களின் உணவுப் பயன்பாட்டிற்கென சாப்பாட்டுத் தட்டுகளும் குவளைகளும் முன்பள்ளிகளுக்கு வழங்கவென உள்ளூராட்சிச் சபைகளுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

முகாமை உதவியாளர் சேவையின் அதியுயர் வகுப்பிற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய ஆணையாளரின் அலுவலகத்தில் பார்வையிட்டு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வலயக் கல்வி அலுவலகத்தில் தமிழ்ப் பாட முதன்மை ஆசிரியராக கடமையாற்றிய த.சின்னத்துரை தமிழ்ப்பாடத்திற்கும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் வே. சிறீதரன் ஆங்கில பாடத்திற்கும் கடமை நிறைவேற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**செல்வி கணேசலிங்கம் பத்மஜா**

இனித்திருக்க உதித்தது:30.08.1990 நினைத்திருக்க மறைந்தது :15.08.2008

அப்பா என்று அழைத்தால் உன்
அன்பு முகம் தெரியும்
அம்மா என்று அழைத்தால் உன்
கருணை உள்ளம் புரியும்
பாசத்தினை விதைத்துவிட்டு
பாதியிலே சென்றதென்ன?

கடந்த 15.08.2008 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய எங்கள் செல்வி அமரர் கணேசலிங்கம் பத்மஜா அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (13.09.2008) சனிக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியம் நாளை (14.09.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிருஷ்ணா பேக்கரி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்.

(78366)



## கண்ணீர் அஞ்சலி



நாதஸ்வர ஓசையிலே
கானமூர்த்தியின்
கைவண்ணம் கண்டோம்
அன்பும் பண்பும் தவழ
எங்கள் தந்தையார் கலாபூஷணம்
ஆ.ஜீவரத்தினம் அவர்களை
''அண்ணை'' என்று அன்புடன்
அழைத்ததை எண்ணிப் பார்க்க
எம் இதயம் வலிக்கிறது....
பேரோடும் புகழோடும்
சீரோடும் சிறப்போடும்
என்றும் மகிழ்வாய்
இருந்த பெருங்கலைஞன்
ஈழத்து நாதஸ்வர மரபின்
நாயகரில் நீ ஒருவன்
சிந்தை இனிக்க செய்திபல
சொன்ன
உன் நாதம் அடங்கியதோ?
நடராஜன் ஆட அவனின்
திருவடிக் கீழ்
உன் நாதஸ்வர ஓசை ஒலி தவழும்.

**திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயம்.**

(#/554628)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**விஸ்வலிங்கம் அருளானந்தம்**
(முன்னாள் அதிபர், யா/வியாவில் சைவ தமிழ் வித்தியாலயம், காரைநகர்)



அன்னையின் மடியில்: 05.05.1929
ஆண்டவன் அடியில்: 26.08.2007
திதி: சுக்கிலபட்ச திரயோதசி

ஓடி ஓடி உழைத்த உத்தமா ஓராண்டு கடந்து விட்டது
உந்தன் நினைவுகள் பசுமையாய் உள்ளதையா!
நீர் சென்ற உலகு நாம் செல்லும் வரை
உந்தன் நினைவுகள் எங்கள் மனங்களில் மலரும்.
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆலங்கன்று
வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

வேதரடைப்பு,
காரைநகர்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(78381)


## நவாலி தெற்கு முன்பள்ளி மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசு

மானிப்பாய்,செப்.13

நவாலி தெற்கு- கொத்துக்கட்டி வீதியில் உள்ள ஹேமலதா ஞாபகார்த்த முன்பள்ளி மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்கென கல்வி ஊக்குவிப்புப் பரிசில் கள் வழங்கப்பட்டன.

முன்பள்ளியின் தலைவர் தலைமையில் புதியமாணவர் வரவேற்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திருமதி நவரத்தினம் இந்திராணி மாணவர்களுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் நிறுவன அபிவிருத்தி உதவியாளர் செல்வி அருளானந் தம் பிரியதர்ஷினி, முன்பள்ளி ஆசிரியை திருமதி க.இந்திர கலா ஆகியோர் உரையாற்றினர்.

முன்பள்ளி மாணவர்களுக்கான ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களும் கல்வி ஊக்குவிப்பு நூல்களும் வழங்கப்பட்டன. (202-95)


## நினைவலைகள்

3ஆம் ஆண்டு



அமரர் சின்னப்பு முருகேசு
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)
ஆண்டவன் அடியில்: 17.08.2005

22ஆம் ஆண்டு



அமரர் முருகேசு ஜெயகாந்தன்
ஆண்டவன் அடியில்: 06.02.1986

32ஆம் ஆண்டு



திருமதி முருகேசு அன்னலட்சுமி
ஆண்டவன் அடியில்: 16.03.1976

திதி: திரயோதசி (13.09.2008)

அப்பா, அம்மா, சோதரர் உங்கள் இறப்பு நேற்று நடந்தது போல்,
மறக்கவில்லை உங்கள் நினைவு, மாறவில்லை எங்கள் சோகம்,
கண்ணீரைக் காணிக்கையாக்கி நிற்கும் உறவுகள்.

ஓம் சாந்தி!

பருத்தியோலை, கந்தரோடை,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வன்னியில் பேரவல நிலைக்கு வழி செய்யும் குரூர உத்தரவு

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான அவசர, அவசிய மனிதநேயப் பணிகளை ஆற்றிவந்த அனைத்துலகத் தொண்டர் அமைப்புகளையும், ஐ. நா. நிறுவனங்களையும் அப்பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு இலங்கை அரசு விடுத்திருக்கும் உத்தரவு, சர்வதேச மனிதாபிமான நெறிமுறைகளையும், அவலப்படும் மக்கள் தொடர்பான சர்வதேசத்தின் நிறைவேற்றப்பட வேண்டிய கடப்பாடுகளையும் தடுத்து மீறும் செயற்பாடாகவே அர்த்தப்படுத்தப்பட வேண்டும்.

''இலங்கையில் தமிழர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் இலங்கை அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட போரினால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வந்த சர்வதேச அமைப்புகளை அங்கிருந்து வெளியேறுமாறு அரசு விடுத்திருக்கும் கட்டளையானது தமிழ் மக்களை வகைதொகையின்றி அழித்து ஒழிக்கும் இனக் குரூரத்தின் இன்னொரு உச்ச வெளிப்பாடாகும். இந்தத் தொண்டர் அமைப்புகள் அங்கு மனித நேயப் பணிகளை ஆற்றி வந்தனவேயன்றி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவில்லை'' - இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியிருக்கின்றது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை, பேரவலப்படும் தமிழ் மக்களுக்கு - உயிர் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவுசெய்ய இயலாமல் கஷ்டப்படும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு - உயிரூட்டுகின்ற ஒரு மனித நேயப் பணிக்கு வேட்டுவைக்கும் செயற்பாடாகவே அர்த்தப்படுத்தப்படவேண்டும்.

இப்படி மனிதாபிமானமின்றி தமிழ் மக்களை நடத்துகின்ற இலங்கைக்கு எதிராக ஐ.நா. தடைகளை அமுல் படுத்துவதற்கு பிரிட்டிஷ் அரசு கோரிக்கை விடுக்க வேண்டும் என்று, பிரிட்டிஷ் நாட்டு சர்வகட்சி நாடாளுமன்றக்குழு வற்புறுத்தியிருக்கின்றது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் பெயரால் தமிழ் மக்களைப் பெரும் துன்பத்துக்குள்ளும், பேரவலத்துக்குள்ளும் தள்ளும் இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கை ஏற்றுக் கொள்ளத்தக்கதேயல்ல என்றும் அக்குழு தெரிவித்திருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினை மற்றும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் அவர்களுக்கு எட்டப்பட வேண்டும். மனிதநேய அமைப்புகள் அந்தப் பணியை முன்னெடுப்பதற்காக - அந்த மக்களை நாடி, சர்வதேச தொண்டர் அமைப்புகளும், மனிதநேய அமைப்புகளும் செல்வதற்கு கட்டுப்பாடுகள், நிபந்தனைகள், கெடுபிடிகளற்ற போக்குவரத்து வசதிகளைத் தலையீடின்றி வழங்குங்கள் என்று அரசுத் தரப்பையும், புலிகள் தரப்பையும், ஐ.நாவிலிருந்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வரை தொடர்ந்து விடாது வலியுறுத்தி வருகையில்,அதற்கு முற்றிலும் முரண்பாடான உத்தரவை இலங்கை அரசு விடுத்திருக்கின்றது.

அதுவும் வன்னிக்குள் புதிதாக இடம்பெயர்ந்த சுமார் இரண்டு லட்சம் அகதிகள், வாழ்வாதார வசதிகள், சுகாதார ஒழுங்குகள், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகள் இன்றி அந்தரித்துக் கொண்டிருக்கையில் - அந்தப் பணியை முன்னெடுக்க வேண்டிய உள்ளூர், வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகளை அங்கிருந்து வெளியேறப் பணிக்கும் கொடூர உத்தரவை, அந்த மக்களின் நலனைப்பற்றிச் சிந்திக்காமல் அரசு விடுத்திருக்கின்றது.

அதுவும் ஏற்கனவே புதிதாக இரண்டு லட்சம் பேர் ஏதிலிகளாகி அந்தரிக்க -

மேலும் புதிதாகப் பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாகும் பேரவலம் அங்கு நேர்ந்திருக்கையில் -

இவ்வாறு ஏதிலிகளாவோருக்கு நிவாரணப் பணியாளர்களின் உதவி மிக உச்சமாகத் தேவைப்படும் வேளையில் -

சர்வதேசத்தின் தார்மீக எதிர்பார்ப்பை நிறைவு செய்யாமல் புறக்கணித்து, மேற்படி உத்தரவைக் கொழும்பு விடுத்திருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

வன்னியில் சுமார் ஐந்து லட்சம் மக்களின் வாழ்வை, மரணத்துக்குள் மூழ்கடிக்க வழி செய்திருக்கும் இந்தக் கொடூரத்தை சர்வதேசம் இன்னும் பார்த்திருப்பது பெரும் மனிதப் பேரவலத்துக்கே வழி செய்யும்.

பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் இலங்கை அரசின் இத்தகைய கொடூரப் போக்கை உணர்ந்து, அதனைக் கண்டித்துத் தண்டித்து இலங்கை ஆட்சி நிர்வாகத்தை வழிப்படுத்த முயலவேண்டும். அதற்கான காலகட்டம் வந்துவிட்டது என அனைத்துக் கட்சிகளுக்கான பிரிட்டிஷ் நாடாளுமன்றக்குழு தெரிவித்துள்ள கருத்துக்களில் அர்த்தம் உள்ளது; நியாயமும் உள்ளது.

இலங்கையின் போக்கில் மாற்றம் இல்லை எனில், இனிமேல் அதனுடன் மென்மையாகப் பேசும் காலம சர்வதேச சமூகத்துக்கு காலாவதியாகிவிட்டது என்பதைக் காட்டும் விதத்தில் காத்திரமான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்கவேண்டும். இல்லையேல் இலங்கையின் இத்தகைய அராஜக - அட்டூழிய - போக்கு இன்னும் தீவிரமாகி மேலும் மனிதப் பேரழிவுக்கே அது வழி செய்யும்.

சர்வதேச சமூகம் விரைந்து தலையிட வேண்டிய முக்கிய விவகாரம் இது.

# வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஐ.சி.ஆர்.சியின் பணிகள் விஸ்தரிப்பு

## அந்த அமைப்பின் பிந்திய அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.13

வன்னியில் இடம்பெயர்ந்து அல்லலபடும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக செஞ்சிலுவை சர்வதேசக்குழு தனது செயற்பாடுகளை அதிகரித்துள்ளது என அக்குழுவின் இலங்கைக்கான தலைவர் ரூன் வன்டென்கோவ் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து வாழும் மக்கள் அனைவருக்கும் மனிதநேய உதவிகள் கிடைக்கவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மிகப் பிந்திய அறிக்கையில் வன்னி மக்களுக்கென உதவி முயற்சிகள் குறித்து விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசபடையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் வன்னியில் அதிகரித்து வருவதனால் தொடர்ந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்களும் மீளவும் இடம்பெயர வேண்டியுள்ளது.

கிளிநொச்சி நகரம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கிச் சென்று அங்கு பாடசாலைகள், குறித்தொதுக்கப்பட்ட இடங்கள், உறவினர் வீடுகள் போன்றவற்றில் அடைக்கலம் தேடி வருகின்றனர்.

இடம்பெயர்ந்தோரை மிகவும் வாட்டும் தேவைகளாக தூய தண்ணீரும் சுகாதாரமுமே உள்ளன என உள்ளூர் அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறும் பெரும் எண்ணிக்கையானோருக்கு பொதுவாக உதவக் கூடியதாக உள்ளபோதும் மோதல் காரணமாக பல தடவைகள் இடம்பெயர்ந்தவர்கள் குறித்து நாம் வருந்துகின்றோம்.

சுகாதாரப் பிரச்சினைகள்

வயிற்றோட்டம், மலேரியா மற்றும் ஏனைய தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது. இது குறித்து அதிகாரிகள் விழிப்பாய் இருக்கின்றனர். விசேடமாக பருவமழை நெருங்கிவரும் இவ்வேளையில் நிலைமைகளை சுகாதார நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்க வேண்டியுள்ளது.

வன்னியில் சுகாதாரம் பேணல் வசதிகள் என்றுமில்லாத அளவுக்கு சிரமமான சூழலிலேயே செயற்படுத் தப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியாலைக்கு அதிகரித்த எண்ணிக்கையில் நோயாளர்கள் வருகின்றனர்- என்றுள்ளது. (202)

# அழிவடைந்த பௌதீக வளங்களை சீராக்கிய வலிகாமம் பணிப்பாளரின் இடமாற்றத்தை ரத்துச் செய்க!

## கல்விச் சமூகம் செயலாளரிடம் கோருகின்றது

யாழ்ப்பாணம்,செப்.13

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள அதிகமான பாடசாலைகள் இடம்பெயர்ந்த பாடசாலைகளாகவும் அவற்றின் பௌதீக வளங்கள் முற்றாகவோ அல்லது பகுதிகளாகவோ அழிவடைந்த நிலையில் இருந்தன. அவற்றை பெரும்பாலும் புனரமைத்து நிறைவு செய்தவர் பணிப்பாளர் விக்னேஸ்வரன்.எனவே அவரது இடமாற்றத்தை இரத்துச் செய்து உதவுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரை சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கல்விக் கோட்ட அதிபர்கள் கோரியுள்ளனர்.

யாழ்.அரச அதிபர், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், சமூக சேவைகள் அமைச்சர் ஆகியோரிடமும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

விக்னேஸ்வரன் எமது வலயத்திற்கு 2005 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டு வலயத்தினைப் பொறுப்பேற்றுக் கொண்டார். வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள அதிகமான பாடசாலைகள் இடம்பெயர்ந்த பாடசாலைகளாகவும் அவற்றின் பௌதீக வளங்கள் முற்றாகவோ அல்லது பகுதிகளாகவோ அழிவடைந்த நிலையில் இருந்தன.

இவரது காலத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து பெருந்தொகைப் பணத்தினைப் பெற்று பாடசாலைகளின் பௌதீக வளத் தேவைகளை பெருமளவு பூரணப்படுத்தியுள்ளார். அத்துடன் ஆசிரியர்களுக்கான வாண்மைவிருத்திச் செயலமர்வுகளையும் அதிகமாக நடத்தி வலிகாமம் கல்வி லயத்தின் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலியவர். இவரது காலத்தில் எமது கல்விக் கோட்டப் பாடசாலைகளின் பௌதீக வளத் தேவைகளும் பெரும்பாலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இவரால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் பலாபலன்கள் முழுமையாகக் கிடைக்க இருக்கின்ற வேளையில் அவருக்கான இடமாற்றம் எமக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே எமது கோட்டப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்றி வருகின்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளரது இடமாற்றத்தினை இரத்துச் செய்து தொடர்ந்தும் வலிகாம வலயத்தில் கடமையாற்ற அனுமதிக்குமாறு தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்களாகிய நாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது.

வலிகாமம் வலய நலன்புரிக் கழகம், வட்டு. இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், தெல்லிப் பழை, பன்னாலை சேர் கனகசபாபதி அ.த.க. பாடசாலை என்பனவும் இதேபோன்ற கோரிக்கையை விடுத்துள்ளன. (202)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.13

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக நிகழ்வில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'ஆதாரம் இலேன்' என்னும் தலைப்பில் வல்வை வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (202-70-72-236)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்று வரும் ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.
* கரவெட்டிப் பிரசே செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

(1-86)

# நாளை

| | |
|---|---|
| ஆவணி 29 | 14.09.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.ப. 03.37வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| | மு.இ. 11.46வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்கு எம்.பிக்கள் 11 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.ஸ்ரீகாந்தா, சொலமன் சிறில் ஆகியோர் தென்மராட்சி பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ஸ்ரீகாந்தா கைதடி, நவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய புனரமைப்புக்கு 9 லட்சம் ரூபாவும் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய கட்டடத் திருத்தம் மற்றும் குடிதண்ணீர் விநியோகத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும் கைதடி-நாவற்குழி அ.த.க பாடசாலைக்கு மின்விநியோகம் மற்றும் தளபாடம் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் கச்சாய் மாதர் கிராம அபி விருத்திச் சங்கத்திற்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்ய ஒருலட்சம் ரூபாவும் கச்சாய் வினோபா பாலர் பகல் பராமரிப்பு நிலையகட்டடப்புனரமைப்புக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(202-207)

# 'பிக் பேங்' எனப்படும் ஆய்வின் முதற்கட்டச் சோதனைகள் வெற்றி

'பிக் பேங்' எனப்படும் பெரு வெடிப்புச் சோதனை இயந்திரத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முதற் கட்ட பரிசோதனைகள் வெற்றி அளித்துள்ளதாக விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

13.7 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் பிரபஞ்சம் உருவான நிலையை மீட்டும் ஓர் அசாமான்ய முயற்சியாகவே இந்த ஆய்வுப் பணிகள் கருதப்படுகின்றன.

27 கிலோ மீற்றர் நீளமுடைய குழாய் ஒன்றில் புரோட்டன்களை செலுத்தி அதன் மூலம் ஏற்படக் கூடிய விளைவுகள் ஆராயப்படவுள்ளன.

பிரபஞ்சத்தின் உருவாக்கம் தொடர்பாக ஆராய்வதற்காக மீண்டும் ஒரு பிரளயத்திற்கு ஈடான சக்தியை வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் பிரதான முயற்சியாக கருதப்படுகின்றது.

இவ்வாறு புரோட்டன் மூலக் கூற்றை ஒத்த மற்றும் எதிர்த் திசைகளில் குழாய்களினூடாக செலுத்துவதன் மூலம் மிகப்பாரிய சக்தியை உருவாக்க முடியும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுவரை ஆய்வுகளுக்காக உருவாக்கப்பட்ட இயந்திரங்களில் மிகவும் சர்ச்சைக்குரிய இயந்திரமாக 'பிக் பேங்' இயந்திரம் கருதப்படுகிறது.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஆய்வு கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதற்கட்ட ஆய்வுகளின் வெற்றி மூலம் விஞ்ஞானிகள் அதிக மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்த வெற்றி காரணமாக ஆய்வுப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்வும், மருத்துவம், உயிரின் பல்வகைமை உள்ளிட்ட பல்வேறு அறிவியல் உண்மைகளை இந்த ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணர முடியும் என்றும் விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாகத் திட்ட மிடப்பட்டுத் தற்போது செயற்படுத்தப்படக் கூடிய நிலையை எட்டியுள்ள 'கடவுளின் துகளைத் தேடும் பரிசோதனைக்கான ஆயத்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்திருந்த நிலையில் மேற்குறிப்பிட்ட பரிசோதனை ஆரம்பமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் எடுத்துவரப்பட்டுள்ளன

குடாநாட்டில் உள்ள பிரதேச சபைகளின் ஆயுள்வேத வைத்திய சாலைகளுக் கான மருந்துகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கான மருந்துகள் எடுத்து வரப்பட்டுள்ளன என்றும்-

அவை விரைவில் விநியோகிக்கப்படும் என்றும் பிரதேச சபையின் செயலாளர் எஸ். சாந்தசீலன் தெரிவித்தார். (202-111)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கார்த்தி சின்னராசா**



மண்ணுலகம்: 14.04.1937
விண்ணுலகம்: 26.08.2006
திதி: 13.09.2008

பாசத்தின் அதிமதுரமே- எங்கள் குலவிளக்கே!
ஓராண்டு போனதையா- உந்தன் மறைவு
ஒரு போதும் மாறவில்லை- உந்தன் நினைவு
ஈரவிழிகள் இமைக்கவில்லை- நீபோய்விட்டாய்
ஒரு கணம் காட்டாயோ உன் முகத்தை.

ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(78397)

## பிறந்தநாள் நினைவலைகள்

தோற்றம் 13 . 09 . 1969



மறைவு 26 . 04 . 2006

**அமரர் தங்கராஜா கமலலோஜன் (கமல்)**
(யா/தொழில்நுட்பக் கல்லூரிப் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

பிரியமுள்ள உறவுகளோடு வாழ்ந்த நினைவுகள்
என்றென்றும் மறக்க முடியாது
என்றும் எம்முடனேயே
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்
பிறந்த நன்நாளில் கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்
பெருமானை நினைந்து நின்று.

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

உங்கள் பிரியமுள்ள உறவுகள்:
அன்பு மனைவி, மாமா, மாமி,
மைத்துனர்மார், உடன்பிறவாச்
சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

(78392)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பேரப்பிள்ளைகளுடன் அன்புக் கதை பேசி,
கொஞ்சி விளையாடி பாசத்தைக் காட்டி
அள்ளி அணைத்து
ஊரூராய் கூட்டிச் செல்லும் நேரம்
அவசரமாய் அன்று சென்று விட்டீரே!
எமை உயிராய்க் கட்டிக்காத்து அன்பால் அரவணைத்த
நீங்கள், அன்று எம் அருகில் இருந்த நாள்களெல்லாம்
தெய்வம் அருகில் இருந்தது போன்றுள்ளது.
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
நீங்காத உம் நினைவுகள்
எங்கள் நெஞ்சில் மாறாது.

உமது ஆத்மா சாந்தியடைந்திட்ட
நம்பிக்கையில் தொடர்ந்து
உம்முடன் செபத்தில்
இருப்போம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல:2/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(78407)



**அமரர் எலியாஸ் ஜெயராஜா**
(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

தாயின் மடியில் 23.01.1943

தெய்வீக நிலையில் 13.09.2004

## நல்லூர் பிரதேச சபை புதிய இடத்தில்

நல்லூர்,செப்.13

நல்லூர் பிரதேச சபையின் அலுவலகம் திருநெல்வேலி, கருவேலடி ஒழுங்கையிலுள்ள இல.14/5 கட்டடத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முன்னர் ஆடியபாதம் வீதியில் உள்ள கட்டடத்தில் சபையின் அலுவலகம் இயங்கி வந்தது. இக்கட்டடத்தில் தாய், சேய் நலன் வைத்திய பரிசோதனைகள் உட்பட விசேட வைத்திய பரிசோதனைகள் இடம்பெறும் என பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சாந்தசீலன் தெரிவித்தார். (202-111)

## சேதனப் பசளைபற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப்.13

சிறுவர் கல்விக்கும் பால்நிலை நெறிப்படுத்துபவர் அபிவிருத்திக்குமான நிலையம் சேதனப் பசளை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வட்டு.சுப்பிரமணிய வித்தியாலயம் மற்றும் வட்டு.கார்த்திகேய வித்தியா லயத்தின் மாணவர்களும், ஸ்ரீ கணேச வாசிகசாலையின் அங்கத்தவர்களும் கலந்து கொள்வர்.

## கொமர்ஷல் வங்கியின் உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.13

கொமர்ஷல் வங்கியில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் கொழும்பு தலைமையகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம், யாழ். இரண்டாம் கிளையில் கடமையாற்றும் எஸ்.சிவகுமார் ஆகியோருக்கே தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,செப்.13

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் க.செல்வக்குமாரன் தலையில்நடைபெறவுள்ள இந்த விழாவில், சிறிலங்கா ரெலிகொம்மின்யாழ்.பிராந்திய முகாமையாளர் செ.சிவானந்தன் பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப.ஜெயக்குமாரக்குருக்களும், நினைவுப் பேருரையையாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி பதில் பணிப்பாளர் கு.சாந்தகுமா[illegible]

(50)

## அஞ்சலி



நல்லூர்.

எமது மன்ற உபதலைவர்
வி.கே. பஞ்சமூர்த்தி
அவர்களின் சகோதரரும் முன்னணி
நாதஸ்வரக் கலைஞருமான
கலாபூஷணம்
**வி.கே.கானமூர்த்தி**
அவர்களின் மறைவால் ஆழ்ந்த
துயருறுகின்றோம். அன்னாருக்கு
மன்றம் தன் அஞ்சலியைச்
செலுத்துகின்றது.


இளங்கலைஞர் மன்றம்.

(# 1554624)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**வேலுப்பிள்ளை அருளம்பலம்**

அன்னையின் மடியில்
28 .04.1930
ஆண்டவன் அடியில்
14.08.2008



மனிதருள்ளும் தெய்வமுண்டு என்பதனை
மெய்ப்பித்த குணக் கொழுந்தே நீங்கள்
மரணித்து முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
கணமும் மாறாது எம் நேசம் எப்போதும்

ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்,புத்தூர்.

என்றும் நினைவுடன்:
மனைவி.

## மரண அறிவித்தல்கள்

### ப.சி.செல்வநாயம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ப.சி.செல்வநாயகம் நேற்று முன்தினம் (11.09.2008) வியாழக்கிழமை இறைவனடிஎய்திவிட்டார்.

அன்னார் மலேயன் பென்சனர் காலஞ்சென்ற பண்டாரபிள்ளை சின்னத்தம்பி-ஆசையம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் (பண்ணாகம் மெய்கண்டான் ஆசிரியை) அன்புக் கணவரும் பொன்விழி (சுவிஸ்), செல்வக்குமாரன் (உரும்பிராய்), மலர்விழி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்கினேஸ்வரராஜா (சுவிஸ்), யசோதா (ஆசிரியை), லோகேஸ்வரன் (கொழும்பு) ஆகியோரின் மாமனும் செந்தூரன், ஜெனனி, கஜானன், சரண்யா, மாதங்கி, மதுராங்கி, ஆஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2008) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

(78391)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
செ.செல்வக்குமாரன்
0776688328.

### திருமதி கண்மணி சுப்பிரமணியம் (நயினாதீவு)



நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (11.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மைனா கந்தையா- பார்வதிப்பிளளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதர்- சின்னாச்சிப்பிள்ளை (அனலைதீவு) தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்புச் சகோதரியும் நடராசா (கனடா), தனபாலசுந்தரம் (நிகொட்-வவுனியா), மாசிலாமணி (மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை), பரமேஸ்வரன் (பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), புவனேஸ்வரன் (கனடா),சாரதாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும் கிருஷ்ணவேணி (கனடா), பத்மாசனி (கொழும்பு), சிவராசினி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2008) சனிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு மேற்கு, நயினாதீவு. (78394)

தகவல்:
சு.பரமேஸ்வரன்
(பரமன்- மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ ஸ்ரீராமஜெயம்

## திருமண சேவை

1976ஆம் ஆண்டு (R.C) சமயத்தை உடைய B.B.A முடித்து நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக இருக்கும் மணமகனுக்கும், 1976ஆம் ஆண்டு செவ்வாய் 20¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கும், 1961ம் ஆண்டு செவ்வாய்குற்றம் பாவம் 19 ½ உடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கும், 1976ஆம் ஆண்டு செவ்வாய் 23 பாவமுடைய கலாசார உத்தியோகமுள்ள மணமகனுக்கும் படித்த அழகான மணமகள்மார் தேவை. டாக்டர்கள், எஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் பிராஜா உரிமை பெற்ற மணமக்களும் பாவம் கூடிய, குறைந்த அரச உத்தியோகத்தரும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:- கமலக்கண்ணன் திருமணசேவை
171/7, மனோன்மணி அம்மன் வடக்கு வீதி, நல்லூர்
T.P. : 0776070862
(78406)


## நாதமாமணிக்கு இதய அஞ்சலி



### கலாபூஷணம் வி.கே.கானமூர்த்தி

மூச்சொலியில் மூங்கில் குழல்
முழங்கிடும் பூபாளம்
பேச்சிழந்து மெய் மறந்து
பார்த்திருப்போம் நாமே!
ஆச்சரியம் உங்கள் திறன்
அன்பு செய்ய உமைப்போல
நேற்று மின்று மினியுமில்லை எவரும்.

பாசமுள்ள மம்மி திருமதி சிவஞானம்,
ஞானலோஜினி சிவஞானம் (சட்டத்தரணி),
ஜெய்சங்கர் சிவஞானம் (சிரேஷ்ட விரிவுரையாளர்).

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
அலெக்ஸ் இம்மானுவேல் தேவராஜன் லெம்பட் (ராஜன்)
(3ஆம் வருட முகாமைத்துவத்துறை)

ராஜன் என்று பெயர் கொண்டாலும் - உன்
வாழ்க்கையில் நீ ராஜா ஆகவில்லை.
காலன் அதைத் தடுத்துவிட்டான் - நாம்
கண்ணீர் மல்க நிற்கின்றோம்.
பிரிவுகள் நிச்சயம் வாழ்க்கையில் - ஆனால்
நீ மிகவிரைவில் பிரிந்து விட்டாய்
துயருறும் எம் வாழ்க்கையில் - நீ
துணிவுடனே பல்கலை வந்தாய் பல கனவுகளுடன்
இன்று, கனவுகள் கைகூடும் முன்பே
கடவுளின் காலடி சரணடைந்ததேனோ?
நம் விழிகளில் வழியும் நீர் துடைப்பதாரோ?
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

(78416) முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி அருணாசலம்

வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைச் சேர்ந்த பரமேஸ்வரி அருணாசலம் நேற்று(12.09.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் (ஓய்வுபெற்ற மத்திய வங்கி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் தணிகாசலம்(ஆஸ்திரேலியா), பரிமளா தேவி (கனடா), தனபாலன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் சந்திரசேகரன் (சேகர்- ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகநாயகி (ஆஸ்திரேலியா), Dr.பரமநாதன் (கனடா), சாந்தி (ஆஸ்திரேலியா), நிர்மலா தேவி (மலர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.09.2008) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்கு

கைலாசப் பிள்ளையார் கோயில் சந்திக்கு அண்மையாக கோயில் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு:-சி.சி.நாதன்,
NO. 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம், T.P: 0776146434. (78408)

## விற்பனைக்குண்டு

6XXX தொடர் இலக்கமுடைய S.L.T PHONE விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-க.சண்முகநாதன், 40/1,
செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்,
(78401)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

45 நாள்கள் நிரம்பிய நல்ல இன சடை நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-குரு இல்லம், மானிப்பாய் தேவாலயம்,
(78399) (மருதடி முன்பாக)மானிப்பாய்.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.கன்னியர்மடம் வித்தியாலயத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக் குண்டு.

தொடர்பு: 69, CONVENT ROAD, JAFFNA.
(78402)

## விற்பனையாகின்றது.....

* அரச அலுவலக தாபன நடைமுறை, அலுவலக முகாமைத்துவம்,
* மாகாணசபை சட்டங்கள்,
* தாபனவிதிக் கோவை,
* அலுவலக முறைமை,
* ஆசிரிய சேவை விடையங்கள்,

மாதிரி வினா விடைகளுடன்
சகல புத்தக சாலைகளிலும்
கிடைக்கும்.


## கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்ட முகாமையாளர்
சுப்பிரமணியம் மாசிலாமணி
அவர்களின் அன்புத் தாயார்

### சுப்பிரமணியம் கண்மணி

அவர்கள் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம்.

யாழ்.மாவட்ட ஊழியர்கள்,
(78403) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை.

## மரண அறிவித்தல்கள்



### முருகேசு இந்திரன்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் 75, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான முருகேசு இந்திரன் (மகேந்திரன்)நேற்று(12.09.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணி (குஞ்சனா)யின் அன்புக் கணவரும் பாலமுருகன், மகிந்தன், ரதன், புரட்சிமாறன், நமணன், முரசொலிமாறன் ஆகியோரின் பாமிகு தந்தையும் ஜெயச்சித்திராவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:(பெறாமக்கள்)

இராசேந்திரன்
நஞ்சிதமலர்(துளசி)
தொடர்பு: 024 492 7077

நாகராசா பரமேஸ்வரி,
சர்வநாதன் மகேஸ்வரி( செல்வதி),
395/4, நாவலர் வீதி,
(78425) நல்லூர், யாழ்ப்பாணம்.



### செல்லப்பா இரத்தினம்

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இரத்தினம் 11.09.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் மருமகனும் லலிதாதேவியின் அன்புக் கணவரும் றபித்வஜன் (H.N.D.A. 3rd year, Evening), சஜிதா (தரம் 9, மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம், சின்னராசா, இரத்தினராசா, ஆனந்தராசா, வள்ளிநாயகி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகரத்தினம், நகுலேஸ்வரன், ஸ்ரீதரன், சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.09.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.
(78423)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவகாமி மகாதேவன்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமி மகாதேவன் அவர்கள் (11.09.2008) வியாழக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி மகாதேவன் (ஓய்வுபெற்ற தொலைபேசி இணைப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தில்லைவனம் தம்பதியினரின் அன்பு மகளும், நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் மருமகளும், சத்தியரூபன்(லண்டன்)னின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(78424)

தகவல்:
ச.கோகுலராஜா
பெறாமகன்.



### பீற்றர் நிறஞ்சன்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், இல.01, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பீற்றர் நிறஞ்சன் (பழைய மாணவன், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி) அகாலமரணமானார்.

அன்னார் பீற்றர் (முன்னாள் ஊழியர் -வி.நு.கூ.ச.யாழ்.)-றெஜின் சறோஸ் தம்பதியினரின் அன்பு மகனும், பிறேமதாஸ்(மேக்கன்ரைல்), பசில்தாஸ் (கட்டார்) கொன்சலா சபீனா (Staff-SKY Computer) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி அலெக்ஸ்சாண்டர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி இம்மானுவேல்(ஜேர்மனி), திருமதி யோசப் ராஜகாரியர்(ஓய்வு பெற்ற பரிசாரர்), திருமதி மகேந்திரன், வரப்பிரகாசம் (வவு னியா), அலெக்சாண்டர்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பெறாமகனும், லோ றன்ஸ் அன்ரனி (பிரான்ஸ்), திருமதி எட் வேட் மரியதாஸ் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி எதிர்வரும் (15.09.2008) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(78424)

தகவல்:
குடும்பத்தினர்.


## ஊர்காற்றுறை பிரதேசசபை, ஊர்காவற்றுறை

## கேள்வி அறிவித்தல் - 2008

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் 25.09.2008 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அதே தினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். இந்த வேலைக்கு நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) தரம் 'எம் -9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் / சமூகமட்ட நிறுவனங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகைமையுடையவராவர்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம்(வற் வரி உள்ளடங்கலாக) |
|---|---|---|
| 1.ஊர்காவற்றுறை நகர கடைத் தொகுதி புனரமைப்பு | 10,000.00 | 575.00 |
| 2.ஊர்காவற்றுறை நூலக கட்டட விரிவாக்கம் | 10,000.00 | 575.00 |

கேள்விப் பத்திரங்களை ஊர்காவற்றுறைப் பிரதேசசபை அலுவலகத்தில் 15.09.2008 ஆம் திகதி தொடக்கம் மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை பிரா.உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 25.09.2008 ஆம் திகதி 10 மணிக்கு முன்னராக நேரடியாவோ / பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகத் தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

12.09.2008 (சி-554634)

ஏ.கணேசானந்தராஜா,
செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை.


### திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கை திறந்த பல்கலைக்கழக முன் பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சி திட்டம் 2008/2009 ஆம் கல்வி ஆண்டுக்கான பதிவுகளை யாழ்.பிராந்திய நிலையத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். சம்பந்தப்பட்ட மாணவர்களை குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தேர்த்திருவிழா நாளை

வடமராட்சி, செப். 13

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெரும் திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது.

தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கு இடம் பெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களை ஒட்டி ஆலயவளாகத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வைத்திய, சுகாதார, குடிதண்ணீர் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அந்தந்தத் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆலய சுற்றாடல்களில்உள்ளஉணவகங்கள், ஐஸ்கிறீம்,இனிப்பு தின்பண்ட வியாபார நிலையங்கள்யாவும் பொது சுகாதார பரிசோதகர்களினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ரயர்களுக்கான பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் பருத்தித்துறை- யாழ்ப்பாணம் இ.போச.டிப்போக்களும் தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கங்களும் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விசேட போக்குவரத்துச் சேவைகளுக்கு ஏற்பாடுகளை செயதுள்ளன.

அத்துடன் ஆலய சுற்றாடல் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம் உள்ளிட்ட பல்வேறு மடங்களில் அன்னதானம் வழங்கவும் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (50-236)

# 2 இலட்சம் பேர்வரை வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வருவர் என எதிர்பார்ப்பு

## அரச அதிபர் ஏற்பாடுகளில் மும்முரம்

வவுனியா, செப். 13

வன்னிப் பிரதேசத்தில் மோசமடைந்து செல்லும் போர்ச் சூழல் காரணமாக அங்கிருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவுக்கு 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தமக்களை வவுனியாவில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய் வதற்காக நேற்று வவுனியா செயலகத்தில் வவுனியா மாவட்ட பதில் அரச அதிபர் நீக்கிலாஸ்பிள்ளை தலைமையில் தொண்டு நிறுவனங் களின் பிரதிநிதிகளுக்கான முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண முகாமைத்துவ அமைச்சின் தேசிய திட்ட இணைப்பாளர் பிரிகேடியர் வி.கே.பி. வீரக்கோன், வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ் மற்றும் புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர் திருமதி வி.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இடம்பெயர்ந்து வருபவர்களுக்கான தற்காலிக தங்குமிட வசதிகள் - சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள், தற்காலிக தங்குமிடங்களில் இருந்து அவர்களை மாற்றி வேறு நலன்புரி நிலையங்களில் தங்க வைப்பதற்குரிய ஏற்பாடுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன் வவுனியா பதில் அரச அதிபர் நிக்கிலாஸ்பிள்ளை தெரிவித்தார்.

வவுனியாவுக்கு வரும் மக்களை உடனடியாகத் தங்கவைப்பதற்கு 6 இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் அதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனவும் கூறிய அவர் ஓமந்தை மகாவித்தியாலயம், காமினி மகாவித்தியாலயம், நெளுக்குளம் மகாவித்தியாலயம்; நெளுக்குளம் நலன்புரி நிலையம், வவுனியா குட்செட் வீதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கட்டடம், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் உட்பட ஆறு இடங்கள் இடைத்தங்கல் முகாம்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன எனவும் குறிப்பிட்டார்.

இந்த இடைத் தங்கல் முகாம்களுக்கு வரும் மக்களுக்காக கறுவல்புளியங்குளம், கல்நாட்டின்குளம் மற்றும் செட்டிகுளத்தில் உள்ள மணிக் பண்ணை ஆகிய இடங்களில் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

---

## பிரதம நீதியரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு அமைப்புகள் கூட்டாக இக்கோரிக்கையை ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கின்றன.

ஒலி மூலம் சூழல் மாசடைதல் தொடர்பாக பிக்கு ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின்போது மன்றுக்குச் சமுகமளித்திருந்த பிக்குகளுக்கும் பிரதம நீதியரசருக்கும் இடையே எழுந்த முறுகலைத் தொடர்ந்தே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் குறித்துத் தாங்கள் நேரடியாக ஜனாதிபதியைச் சந்தித்து பிரச்சினை எழுப்பவுள்ளனர் என்றும் -

கொழும்பிலிருந்து கண்டிக்கு பாத யாத்திரை

இவ்விடயத்தை ஒட்டி கொழும்பிலிருந்து கண்டிக்குப் பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்வர் என்றும் -

மதமாற்றக் கண்காணிப்பு மைய இய்க்குநரான வண.கலகொடஅத்த ஞானசார தேரர் தெரிவித்தார்.

பிக்குகளுக்காகத் தனி நீதிமன்றம் அமைத்தல் உட்பட பிக்குகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கும் பாதயாத்திரைக்கும் உரிய திகதிகள் விரைவில் நிர்ணயிக்கப்படும் என்றார் அவர்.

பௌத்த பிக்குகளின் பாரம்பரியப்படி அவர்கள் மற்றொரு பிக்குவைத் தவிர வேறு யாருக்கும் எழுந்து மரியாதை செலுத்த மாட்டார்கள் என்றும் -

அதையே நீதிமன்றிலும் அவர்கள் பின்பற்றினர் என்றும் -

அவர் மேலும் தெரிவித்திதார்.(அ-சி)

---

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் முன்னரங்க நிலையிலி ருந்து 200 மீற்றர் தூரத்தில் மாலை 5.05 மணிளவில் முதலாவதுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்,

மாலை 5.10 மணியளவில் புலிகளின் முன்னரங்க நிலையிலிருந்து 500 மீற்றர் தொலைவில் இரண்டாவது குண்டு வீசப்பட்டது என்றும் விமானப்படையினரின் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜானக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களின்போது அந்தப் பகுதியில் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆயுதக் களஞ்சியங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறுகின்றார்.

எனினும், இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எந்தவிதத் தகவல்களும் வெளி வரவில்லை.

---

## தொண்டு அமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகளினால் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில், அரசாங்கத்தின் அறி வுறுத்தலுக்கு அமைய அந்தப் பிரதேசத்தில் இருந்து ஐ.நா சபை சார்ந்த நிறுவனங்களும், ஏனைய சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

இதனால் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் 22பாடசாலைகளில் தங்கியிருந்த மக்களுக்கான மாற்று வாழ்விட வசதிகளை ஏற்படுத்துவதற்காக தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வந்த வேலைத்திட்டங்கள் முடிவடையாத நிலையில் கைவிடப்பட்டிருக்கின்றன.

17பாடசாலைகளில் மாத்திரமே இடம் பெயர்ந்த மக்கள் வெளியேறுவதையடுத்து, அங்கு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்து பாடசாலைகளில் இன்னும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வில்லை.

அத்துடன் மாற்று வாழ்விட வசதிகளைப் பெற்றவர்களும் தமக்குரிய அடிப் படை வசதிகளை முழுமையாகப் பெற முடியாத நிலை யில் இருக்கின்றனர்- என்றார். (அ-01)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
SPOKEN ENGLISH
SPOKEN SINHALA
3மாத பயிற்சி வகுப்புக்கள்
ஆசிரியர்
திரு.சோமசுந்தரம்
ஆரம்பம்:-
14.09.2008
Sun 7.00 a.m

# கப்பூதுவில் வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் நேற்று மீட்பு

மந்திகை, செப். 13

வடமராட்சியில், கப்பூது, குயிலங்கண்டி வீதியில் இளைஞர் ஒருவரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

வயிறு, கழுத்து, விலாப்பகுதி ஆகிய இடங்களில் வெட்டுக் காயங்கள் காணப் பட்டன.

கறுப்புத் தோற்றமுடைய சுமார் 35வயது மதிக்கத்தக்கவரின் சடலமே மீட்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர் நான்கு நாள்களுக்கு முன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று விசாரணையின் போது ஊகிக்கப்பட்டது.

பருத்தித்துறை மேலதிக நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை மந்திகை ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறும் ஐந்து நாள்களுக் குள் சடலம் அடையாளம் காணப்படாவிட்டால், அதனை அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

கப்பூது வெளியில் ஏற்கனவே இம்மாத முற்பகுதியில் கொலைசெய்யப்பட்ட பெண் ஒருவரினதும் ஆண் ஒருவரினதும் சடலங்கள் மீட்கப்பட்டது தெரிந்ததே. (அ-01-218)

# காலி சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகள் மூவர் சுட்டுக்கொலை

காலி, செப். 13

காலி சிறைச்சாலையில் காவலாளியொருவரைக் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் செல்ல முயன்ற கைதிகள் மூவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குற்றச்செயல்கள் பலவற்றுடன் தொடர்புபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்த கைதி ஒருவரும் வேறு இரு கைதிகளும் சிறைக்காவலாளி ஒருவரைக் கத்தியால் குத்திவிட்டு தப்பிஓடிய வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

மூவரும் சிறைச்சாலை மதிலுக்கு மேலாகக் குதித்து காலியில் உள்ள சீனர் கார்டன் வீதியூடாகத் தப்பிச் செல்ல முயன்றவேளை, இவர்களை சிறைச்சாலைக் காவலர்கள் துரத்தித் துரத்திச் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று கூறப்பட்டது.

காலி மினுவாங்கொடவில் வைத்து இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள அதே வேளை, சீனங்கொள்ள என்ற இடத்தில் வைத்து மற்றவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கான சிறைக் காவலாளி காலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (சி)

# கிழக்கில் வேலையில்லாப் பட்டதாரிகள் இரு நாள் உண்ணாவிரதப் போராட்டம்

காரைதீவு, செப். 13

கிழக்கில் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் பட்டதாரிகள் மட்டக்களப்பில் கடந்த இரு நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் சங்கம் இந்த ஏற்பாட்டைசெய்துள்ளது. தமக்கு வேலை வழங்க வேண்டும் எனக் கோரி 135 பட்டதாரிகள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காலை மட்டு. விபுலானந்தா கல்வியகத்தின் முன்றிலிருந்து ஊர்வலமாகத் சென்ற பட்டதாரிகள் மட்டு. வலயக் கல்வி அலுவலகம் முன் அமர்ந்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

நேற்று வெள்ளியன்று பிற்பகல் 1.00 மணியளவில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரட்ணத்துடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இதே நேரம் உண்ணாவிரதமிருந்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த பட்டதாரி மாணவி றிசானா மயக்க நிலையில் மட்டு. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் சில மாணவிகளின் நிலை மோசமாக இருக்கிறது எனவும் அறிய வந்தது. (சி)

---

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரண்ட மக்கள் அவர்களையும் வெளியேற விடாது முற்றுகையிட்டனர்.

அந்த அலுவலகம் முற்றுகையிடப்பட்ட நிலையில் மக்களின் பிரதிநிதிகளை அழைத்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகப் பிரதிநிதி உரை யாடினார்.

தமக்கு வன்னியிலிருந்து செல்ல விருப்பம் இல்லை எனவும் ஆனால் தமது தலைமையகம் சிறிலங்கா அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் வெளியேறப் பணித்துள்ளதாகவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதி தெரிவித்தார்.

த்மிழ் மக்களை கொன்றொழிக்கப் போகும் மஹிந்த அரசாங்கத்துக்கு துணை போவது போன்று இந்த வெளியேற்ற நடவடிக்கை இருப்பதாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்த போது தாம் இதனைத் தமது உயர்பீடத்துக்கு உடனடியாக அறிவிப்பதாக அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்பீடம் சிறிலங்கா அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேச்சில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால், மக்கள் அவர்களை செல்லவிடமாட்டோம் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளனர். (அ)

---

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படையின் 36 ஆவது படைப் பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து அங்கு வந்து அவர்கள் தேடுதல் நடத்தியபோதே இந்தச் ஷெல்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

மோட்டார் ஷெல்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் படையினர் மேலதிக சோதனை நடவடிக்கைகளையும், தேடுதல்களையும் மேற்கொண்டுவருகின்றனர். (சி)

---

## ஈழத்தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.ராஜா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கைப் பாதுகாப்பு படையினருக்கு இந்தியா இராணுவ ரீதியாக உதவுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்த தனது மௌனத்தை மத்திய அரசு கலைக்க வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

இலங்கையில் முழு அளவிலான யுத்தமொன்று இடம்பெறுவதாக தெரிவித்துள்ள ராஜா, இலங்கை அரசு மனிதநேய அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களிடம் செல்வதற்குத் தடை விதித்துள்ளதால் மக்கள் கடும் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இராணுவத் தளமொன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இந்தியர்கள் காயமடைந்துள்ளனர் என வெளியாகியுள்ள தகவல்களை சுட்டிக்காட்டியுள்ள அவர், காயமடைந்தவர்கள் இராணுவத்தினரா அல்லது பொது அலுவலர்களா என்பதை தாம் அறிய விரும்புகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
O/L PAPER CLASS
சகல பாடங்களும்
(DAY & EVENING CLASS)
ஆரம்பம் :-
14.09.2008
Sun 8.30 a.m

மானிப்பாயில்
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான
100% Practical Education !!! BATCH - 01
Diploma in
Computer Servicing Technician
Electronic Components Study
Digital Electronics
Practical Electronics (UPS, Power supply, Monitor, Printer)
Telecommunication
Trouble Shooting Guides
Computer Customizations
PC Assembling
Etc.
மேலதிக விபரங்களுக்கு
UNI TECHNOLOGY
Manipay T.P:- 0777 - 110862

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org